# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 13 வள்ளுவர் ஆண்டு 2029 ஆவணி 17 புதன்கிழமை (02-09-1998) UTHAYAN A Lively National Tamil Daily சுடர்: 238


# புலிகளுடன் பேச முன்னர் தெற்கில் கருத்தொற்றுமை ஏற்பட வேண்டும்!

## அமைச்சர் ஜி. எல். பீரிஸ் சென்னையில் தகவல்

சென்னை, செப்டெம்பர் 2

"இனப்பிரச்சினைக்கு புலிகளுடன் பேசித் தீர்வு காண வேண்டுமாயின், அதற்கு முன்னர் பெரும்பான்மை இனத்தவரான சிங்களவர்களிடையே அரசியல் ரீதியான கருத்து ஒற்றுமை ஏற்படுவது அவசியம்."

— இவ்வாறு நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் நேற்று சென்னையில் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

இந்தியா வந்திருக்கும் அமைச்சர் பீரிஸ் சென்னையில் பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு பதில் அளிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:

பிரிவினை கோரும் புலிகளுடன் பேச்சு மூலம் சமரசத் தீர்வு காண வேண்டுமானால், பெரும்பான்மை இனத்தவரான சிங்களவரிடையே அரசியல் ரீதியான கருத்து ஒற்றுமை ஏற்படுவது

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞர்கள் விடுவிப்பு

அண்மையில் ஹட்டன் நோசல ரயில் நிலையத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புத் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட 24 மலையக இளைஞர்களில் 20 பேர் நேற்று நுவரேலிய நீதிவானால் விடுதலை செய்யப்பட்டனர்.

ஏனையோரை தலா ஆயிரத்து 500 ரூபா ரொக்கப் பிணையில் செல்ல நீதிவான் உத்தரவிட்டார். (உ-3-21)

## வேலை நிறுத்தம்

நுவரேலியாமாவட்டத்தில் லபுகல தோட்டத்தைச் சேர்ந்த 300 தொழிலாளர்கள் நேற்று வேலை நிறுத்தத்தில் குதித்தனர்.

அங்குள்ள பொதுமயானப் பகுதியில் விவசாயம் செய்ய முயற்சி எடுக்கப்பட்டுள்ளதைக் கண்டித்தே இந்த வேலை நிறுத்தம் இடம்பெற்றது. (உ-3)

## கப்பலில் வெள்ளியன்று திருமலை செல்லலாம்

யாழ்ப்பாணம், செப். 2

காங்கேசன்துறையிலிருந்து திருகோணமலைக்கு 'லங்கா முடித்த' கப்பல் மூலமாக நாளை மறுதினம் பயணிகளை அழைத்துச் செல்ல ஏற்பாடாகியுள்ளது என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்துள்ளது.

கப்பலில் செல்ல விரும்பும் பயணிகளை இன்று பிற்பகல் ஒரு மணிக்கு யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ளும் படியும்—

பதிவு செய்த பயணிகளை நாளை பிற்பகல் ஒரு மணிக்கு பயண ஏற்பாட்டுடன் யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தில் சமுகமளிக்க வேண்டும் என்றும் — கேட்கப்பட்டுள்ளது.

திருகோணமலையிலிருந்து நேற்றுப்புறப்பட்ட "லங்கா முடித்த" கப்பலில் ஆயிரத்து ஏழு பயணிகள் காங்கேசன் துறைக்கு வருகின்றனர். (உ-3)

### வறக்காப்பொளையில்

## டக்ளஸின் உதவியாளர் பஸ் விபத்தில் பலி!

கொழும்பு, செப். 2

கொழும்பிலிருந்து திருகோணமலை நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ்ஸும், திருகோணமலையில் இருந்து கொழும்பு நோக்கி வந்துகொண்டிருந்த பஸ்ஸும் வறக்காப்பொளயில் நேற்றுக் காலை நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்தார்; 7 பேர் காயமடைந்தனர்.

ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவின் தனிப்பட்ட உதவியாளரான வைத்தி பீற்றர் (62 வயது) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவரது மரணத்துக்கு அனுதாபம் தெரிவித்து ஈ.பி.டி.பி. அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளர் வி.கே. ஜெகன் செய்திக் குறிப்பொன்றை வெளியிட்டுள்ளார்.

"யாழ். மக்களின் பிரச்சினைகளை நன்கு அறிந்து அவற்றைத் தீர்ப்பதில் கூடிய அக்கறை காட்டினார். பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக் காரணமாகவும் இருந்தார். அவரது மறைவு பேரிழப்பாகும்" — என்று அச்செய்தியில் அவர் தெரிவித்துள்ளார். (உ-3)

# உலக நாடுகளின் அழுத்தம் ஐ.தே.க. மீதுதான் அவசியம்

## புலிகளின் கோரிக்கைக்கு பீரிஸ் பதில்

சென்னை, செப். 2

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஒத்துழைக்க மறுக்கும் ஐ.தே. கட்சி மீது தான் உலக நாடுகள் அழுத்தம் கொடுக்க வேண்டும். சந்திரிகா அரசு மீது அல்ல.

—இவ்வாறு கருத்துக் கூறினார் அமைச்சர் பீரிஸ்.

இராணுவ முனைப்பைக் கைவிட்டு பேச்சு மூலம் சமாதானத் தீர்வுகாண ஸ்ரீலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என அணிசேரா நாடுகளின் தலைவர்களை விடுதலைப்புலிகள் கோரியிருப்பது குறித்து சென்னையில் பத்திரிகையாளர்கள் கேட்டபோதே அமைச்சர் பீரிஸ் இவ்வாறு கூறினார்.

தாங்கள் இந்துக்களாக இருப்பதனாலேயே வேட்டையாடப்படுகிறோம் என்ற விடுதலைப்புலிகளின் தவறான பிரச்சாரம் இந்தியாவின்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## டிசம்பர் மாதத்திலேயே ஜனாதிபதித் தேர்தல்!

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் இரண்டாண்டுகள் இருக்கின்றபோதும்—அதற்கு முன்பதாக — எதிர்வரும் டிசம்பர் மாதத்திலேயே அந்தத் தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதி சந்திரிகா முன்வரலாம்.

இவ்வாறு நேற்று சென்னையில் செய்தியாளர்களிடம் ஆருடம் கூறினார் அமைச்சர் ஜி. எல். பீரிஸ்.

பதவிக் காலம் முடிவதற்கு இரண்டாண்டுகள் முன்னரே ஜனாதிபதித் தேர்தலை நடத்தி, மக்களைச் சந்திப்பதன் மூலம் இனப்பிரச்சினைத் தீர்வுகான தமது திட்டத்துக்கும், தனக்கும் மக்களிடம் பெரும் ஆதரவு இருக்கின்றது என்பதை நிரூபிக்க ஜனாதிபதி முன்வரலாம் — என்றும் அமைச்சர் சொன்னார்.

## மூன்று புலிகள் மரணம்

வவுனியா, செப். 2

கடந்த 28 ஆம் திகதி இரவு 8 மணியளவில் இருபாலைப் பகுதியில் இராணுவத்துடன் எதிர்பாராது ஏற்பட்ட மோதலின்போது விடுதலைப் புலிகள் உறுப்பினர் மூவர் மரணமானதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

கப்டன் மாதவன் (கனகராசா சுமித்திரன் — யாழ்ப்பாணம்), லெப்டினன்ட் செங்கதிர்வாணன் அல்லது வேங்கை (செ. சுகுமார்— யாழ்ப்பாணம்), சோழன் (இரட்ணம்ஜெட் இசையன்பன் யாழ்ப்பாணம்) ஆகியோரே மரணமானவர்களாவர். (உ-3)

## தேர்தல் ஒத்திவைப்பு; ஜே. வி. பி. இன்று வழக்கு

கொழும்பு, செப். 2

தெற்கு மாகாண சபைத் தேர்தல் பின் போடப்பட்டமையை எதிர்த்து ஜே. வி. பி இன்று அல்லது நாளை வழக்குத் தாக்கல் செய்ய விருப்பதாக அந்த அமைப்பின் பிரசாரசெயலாளர் விமல்வீரவன்ஸ தெரிவித்தார்.

உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்றும் ரிட்மனு ஒன்றும் தாக்கல் செய்யப்பட விருப்பதாக அவர் தெரிவித்தார்.

இந்த மனுக்கள் தாக்கல் செய்வது தொடர்பான சகல சட்ட ஆயத்தங்களும் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் சொன்னார். (உ-3-10)

### வெளிநாடுகளுக்கு

## 48 மணிநேரம் கழித்தே பொதிகள் அனுப்பப்படும்

கொழும்பு, செப். 2

இலங்கையில் இருந்து வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படும் பொதிகள் தொடர்பாக புதிய நடைமுறை ஒன்று அமுலுக்கு வந்துள்ளது.

பாதுகாப்புக் காரணங்களுக்காக அமுலுக்கு கொண்டு வரப்பட்டுள்ள புதிய நடைமுறையின் படி—

துறைமுகங்கள், விமான நிலையங்கள் மூலமாக வெளிநாட்டுக்கு அனுப்பப்படும் பொதிகள் 48 மணிநேரம் தடுத்து வைக்கப்படும்.

இவற்றைத் தடுத்துவைக்க விசேட நிலையங்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-3-21)

## வட அயர்லாந்துப் பிரமுகர் நாளை யாழ். வருகிறார்

யாழ்ப்பாணம், செப். 2

இலங்கை வந்துள்ள வட அயர்லாந்து அல்ஸ்ரர் பல்கலைக்கழக பேராசிரியர் பிறஸர் நாளை யாழ்ப்பாணம் வருகின்றார்.

அவர் நிகழ்த்தும் சிறப்புச் சொற்பொழிவு நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2. 30 மணிக்கு துணைவேந்தர் பொ. பாலசுந்தரம் பிள்ளையின் தலைமையில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் பிறேஸர் "பிரிந்திருக்கும் சமூகங்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தும் ஒரு மாதிரிகையாக வட அயர்லாந்து உடன்படிக்கை" என்ற தலைப்பில் உரை நிகழ்த்துவார்.

இந் நிகழ்வை இனத்துவ

(10 ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 வருடங்களுக்குப் பின் சந்திரிகா - அனுரா சந்திப்பு

கொழும்பு, செப். 2

சுமார் நான்கு வருடங்களின் பின்னர் ஜனாதிபதி சந்திரிகாவும் அவரது சகோதரரான அனுரா பண்டாரநாயகாவும் கடந்த திங்களன்று சந்தித்து சுமார் 15 நிமிடங்கள் உரையாடினர்.

போக்குவரத்து நெடுஞ்சாலை அமைச்சர் ஏ. எச். எம். பௌசி சுகவீனமுற்று தற்போது நவலோக தனியார் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அமைச்சர் பௌசியைப் பார்க்க இருவரும் சென்றபோதே இந்த எதிர்பாராத சந்திப்பு இடம்பெற்றது.

பல ஆண்டுகளின் பின்னர் இருவரும் சந்தித்து உரையாடியதால் இருவரும் மகிழ்ச்சியுடன் காணப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்தபோது — பிரதமராக சந்திரிகா சத்தியப்பிரமாணம் எடுத்தபின்னர் — நடைபெற்ற முதலாவது நாடாளுமன்றக்கூட்டத்திலேயே இந்த இருவரும் கடைசியாகச் சந்தித்து உரையாடியிருந்தனர். (உ-10)

# நிவாரணத்துக்கு சிவப்பு நாட்டரிசி

தற்போது பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் மூலம் விநியோகிக்கப்பட்டு வரும் 64 எ. பி, 65 எ. பி. உணவு முத்திரைகளுக்கான நிவாரண விநியோகத்தின் போது சிவப்புநாட்டரிசி (குத்தரிசி) வழங்கப்பட்டு வருவதாக யாழ் செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் தெரிவித்தனர்.

கடந்த காலங்களில் நிவாரண விநியோகத்தின் போது கோறா மற்றும் வெள்ளைப் பச்சை அரிசி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ - 7)

# தமிழ் கட்சியிடமிருந்து விலகி இராணுவத்திடம் சரண் புகுந்த முஸ்லீம் இளைஞர்

தமிழ்க் கட்சியிலிருந்து விலகியதன் பின்னர் பொலீஸார் மூலம் யாழ்.நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட முஸ்லீம் இளைஞர் ஒருவரை அவரது சொந்த இடத்திற்கு அனுப்பிவைக்குமாறு நீதிமன்றம உத்தரவிட்டது.

எஸ். றஹீம் (வயது-20) என்ற — மட்டக்களப்பைச் சேர்ந்த — இந்த இளைஞர் தமிழ்க் கட்சியிலிருந்து விலகி இராணுவத்தினரிடம் தஞ்சம் அடைந்தார் என்றும்—

இராணுவத்தினர் அவரை யாழ். பொலீஸாரிடம் ஒப்படைத்தனர் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

மேலதிக நீதிவான் மு. திருநாவுக்கரசு இவரைச் சொந்த இடத்திற்கு அனுப்பிவைக்குமாறு உத்தரவிட்டுள்ள போதிலும் கப்பல் போக்குவரத்து இல்லாமையினால் அவரைச் சொந்த இடத்திற்கு அனுப்பமுடியாமலிருப்பதாக சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-5)

# கொடி வாரம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 2

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட அலுவலகத்தின் கொடிவாரம் நேற்று யாழ். அரச அதிபர் க. சண்முகநாதனால் சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்டது.

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவி இயக்குனர் ரி.சிவதட்சிணாமூர்த்தியிடம் இருந்து முதலாவது கொடியைப் பெற்று அரச அதிபர் இந்தக் கொடி தினத்தை ஆரம்பித்துவைத்தார்.

நேற்று ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கொடி தினம் எதிர் வரும் 10 ஆம் திகதிவரை யாழ். மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்டத்திலுள்ள 120 இளைஞர் கழகங்களைச் சேர்ந்த அங்கத்தவர்கள் கழக நடவடிக்கைகளுக்கும், வேலைத்திட்டங்களுக்குமென கொடி வாரத்தில நிதி சேகரிப்பில் ஈடுபடுவர் என்றும்—

இந்நாள்களில் அவர்களுக்கு வேண்டிய ஒத்துழைப்பை வழங்குமாறும்—

தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ், மாவட்ட அலுவலகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-5)

# கண்ணீர் அஞ்சலி

எமது வகுப்பாசிரியையான
திருமதி சௌ. சரவணபவானந்தனின்
அன்புக் கணவரான

## சிவசம்பு சரவணபவானந்தன்

அவர்களின் திடீர் மறைவையொட்டி அன்னாரின் குடும்பத்திற்கு அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்

99 கலைப்பிரிவு மாணவிகள்
யாழ். வேம்படி
மகளிர் உயர்தரப் பாடசாலை.

(58868)

# இன்றைய உதைபந்தாட்டம்

தெல்லிப்பழைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் —கோட்ட மட்ட—உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று ஆரம்பமாகின்றது.

சுற்றுப்போட்டி ஆட்டங்கள் யாவும் அருணோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். இன்று பிற்பகல் 2.15 மணி முதல் நடைபெறும் 16 வயதுப் பிரிவினருக்கான ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள் வருமாறு:-

★ வயாவிளான் ம. ம. வி. எதிர் அருணோதயாக் கல்லூரி.

★ யூனியன் கல்லூரி எதிர் குளமங்கால் றோ. க.

★ மல்லாகம் ம. வி. எதிர் தெய்கண்டான் ம. வி. (உ)

# ST. PATRICK'S COLLEGE-JAFFNA.

## அனுமதி விண்ணப்பம் 1999

29-08-98 'சஞ்சீவி' இதழின் ஆறாம் பக்கத்தில் வெளியான மேற்படி விளம்பரத்தின் மூன்றாவது பந்தியை பின்வருமாறு திருத்தி வாசிக்கவும்!

★ முதலாம் ஆண்டு

01-02-93 – 31-01-94 (இரு திகதிகளுக்கும் உட்பட்ட) பிறந்திருக்க வேண்டும்.

# திருட்டுக் குற்றத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை

யாழ்ப்பாணம், செப். 2

ஊர்காவற்றுறை கிறிஸ்தவ தேவாலய பாதிரியாரின் பணத்தைத் திருடியதாகக் கூறப்படும் இளைஞர் ஒருவருக்கு 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாத கடூழியச் சிறைத்தண்டனை ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்ற மேலதிக நீதிவான் மு. திருநாவுக்கரசுவினால் விதிக்கப்பட்டது.

பாஸ்கரன் பிறேமன் (20வயது)என்ற இந்த இளைஞர் திருட்டுக் குற்றத்தை நீதிவான் முன்னிலையில் ஒப்புக் கொண்டதையடுத்து, இவர் மீது கருணை காட்டுமாறு சட்டத்தரணி திருமதி ச. இளங்கோவன் நீதிவானிடம் கோரிக்கை விடுத்தார்.

மேற்படி இளைஞரிடம் இருந்து மீட்கப்பட்ட 980 ரூபாவையும் பாதிரியாரிடம் ஒப்படைக்குமாறும் நீதிவான் உத்தரவு வழங்கினார்.

(உ-5)

# இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

கோப்பாய் பிரிவு

## பத்திரிகையாளர் அடிப்படைப் பயிற்சிநெறி

[இதழியல் உட்பட]

கீழ்க்குறிப்பிடும் தகைமைகள் கொண்ட கல்வி கற்றுவிட்டு வேலையற்றிருக்கும் ஆண் பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

★ கல்வித் தகைமை:
விண்ணப்பதாரி குறைந்த பட்சம் க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சையில் தமிழ் மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

★ யாழ் மாவட்ட பாடசாலைகளில் உயர் வகுப்புக்களில் கல்வி பயில்வோர் பாடசாலை அதிபர்கள் ஊடாக விண்ணப்பம செய்யலாம்.

★ வயதெல்லை:
18 வயதுக்கும் 45 வயதுக்கும் உட்பட்டவராக இருத்தல் அவசியம்.

★ பயிற்சி நெறி:
பயிற்சி நெறி 72 மணித்தியால போதனையாக அமையும். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வகுப்புக்கள் காலை 9-00 மணிமுதல் பகல் 12-00 மணி வரை கோப்பாய் செஞ்சிலுவைச் சங்கப் பணிமனையில் நடைபெறும், வகுப்புக்களை பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பல்துறை சார்ந்த கல்வியாளர்கள், மூத்த பத்திரிகையாளர்கள் பாடவிதான ஒழுங்குக்கமைய நடத்துவார்கள். பயிற்சி நெறிகளின் போது பாடக் குறிப்புகள் இலவசமாக வழங்கப்படும்.

★ பயிற்சி நெறி 20 09-1998 இல் ஆரம்பமாகும்.

★ பயிற்சி நெறி முற்றிலும் இலவசமானது.
பயிற்சி நெறிகளில் முழுமையாகப் பங்கு கொண்டவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும்.

விண்ணப்பப் படிவங்களை கோப்பாய் கட்டைப்பிராயில் இயங்கும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க கோப்பாய் பிரிவு பணிமனையில் ரூ. 20/- செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம், விண்ணப்பங்கள் 15-09-98 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

இ. மயில்வாகனம்
செயலாளர்

வைத்திய கலாநிதி வை. தியாகராசா
தலைவா

(58688)

# நாகம்ஸ் சினிமா

சுன்னாகம்

கார்த்திக், சௌந்தர்யா
கவுண்டமணி- செந்தில்
நடித்த

**பொன்னுமணி**

இனிய பாடல்கள்
நிறைந்த படம்

திரைப்படக் கட்டுத்தாபன (ரீல்ஸ்) படம்.

காட்சிகள்:- 10-30, 2-30

(58872)

# லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி

சிவாஜி, முரளி,
ரோஜா, சுவலட்சுமி
மணிவண்ணன்,
செந்தில் நடித்த

**என் ஆசை ராசாவே**

அடுத்த வெளியீடு
அர்ஜுன் - தபு - சிம்ரான்
நடிக்க

**தாயின் மணிக்கொடி**

(புதிய வெளியீடு)
நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)
Tele. No. 070-212228

(58486)

# ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்.

ரஜனி, மீனா
சரத்பாபு, செந்தில்
நடித்த

**முத்து**

# ராஜா 'B' திரை

யாழ்ப்பாணம்.

இன்று முதல்
பிரபு - மீனா - நதியா
கவுண்டமணி, செந்தில்
நடித்த

**ராஜகுமாரன்**

10-30, 2-00, 5-00
(புதிய நேரம்)

(சி/4737)

# பொன்விழாவும் பரிசளிப்பும்

வடமராட்சி, செப்2

தென்புலோலி காந்தியூர் சனசமூக நிலையத்தின் பொன் விழாவும் பரிசளிப்பு விழாவும் இன்று புதன் கிழமை பிற்பகல் 5 மணிக்கு பொ. மோகன் தலைமையில் சனசமூகநிலைய முன்றலில் நடைபெறும்.

பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி பிரதம விருந்தினராகவும், பருத்தித்துறை பிரதேச செயலக உதவிதிட்டப் பணிப்பாளர் நா. மகேந்திரன் விசேட விருந்தினராகவும் இவ்விழாவில் கலந்துகொள்வார்கள்.

கருத்தரங்கு, கலைநிகழ்ச்சிகள் என்பன இடம்பெறுவதுடன், இன்று பிற்பகல் 3 மணிக்கு வீரதீரச்செயல்களும் இடம்பெறும்.

(இ-173)

# 125 ஆவது ஆண்டு நிறைவு வைபவங்கள்

யாழ். புனித மரியாள் வித்தியாலயத்தின் 125 ஆவது ஆண்டு நிறைவு வைபவம், ஒக்ரோபர் 6 ஆம், 7 ஆம், 8 ஆம் திகதிகளில் நடைபெற உள்ளது.

ஆசிரியர் தினம், பரிசளிப்பு விழா, நிறைவுநாள் மலர் வெளியீட்டு நிகழ்ச்சிகள் ஆகியவையும் —

சிறப்பு நிகழ்ச்சிகளாக நாடகம், நாட்டுக்கூத்து, இசைநிகழ்ச்சிகள் ஆகியவையும் — இடம்பெற உள்ளதாக யாழ். புனித மரியாள் வித்தியாலய அதிபர் சி. தார்சீசியஸ் தெரிவித்துள்ளார்.

(இ-51)

# சீருடைத்துணி விநியோகம்

நல்லூர்க்கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகளுக்கான இலவச சீருடைத் துணிகள் எதிர்வரும் 9 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு வழங்கப்படவுள்ளதாக நல்லூர்க் கல்விக் கோட்ட உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

நாளை மறுதினம் சீருடைத் துணிகள் வழங்கப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்ததாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(உ-7-51)

# WANTED

For
IMMEDIATE EMPLOYMENT

★ A DANCE TEACHER
★ A BIOLOGY and CHEMISTRY TEACHER

Contact:
- Principal

JAFFNA COLLEGE,
Vaddukoddai.

(C/4740)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் நெருக்கடிக்கு மத்தியில்

# கிளின்ரன் மொஸ்கோ பயணம்!

## யெல்ட்ஸினுடன் மூன்று நாள் உச்சிப் பேச்சு!

மொஸ்கோ, செப். 2

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு ரஷ்யா வந்துள்ளார்.

மொஸ்கோ விமான நிலையத்தில் கிளின்ரனுக்கும் அவரது மனைவி கிலாரிக்கும் அமைதியான முறையில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

ரஷ்யாவில் பொருளாதார அரசியல் நெருக்கடிகள் மோசமடைந்து உத்தியோகபூர்வ அரசாங்கம் எதுவும் இல்லாத நிலை உருவாகி இருக்கும் இந்த நேரத்தில் கிளின்ரன் மேற்கொண்ட விஜயம் சர்வதேச கவனத்தை பெரும் அளவில் கவர்ந்துள்ளது.

கிளின்ரனின் ரஷ்ய விஜயம் ஒத்தி வைக்கப்படலாம் என்றே முதலில் கருதப்பட்டது. எனினும் திட்டமிட்டபடி அவர் பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

அதேசமயம் ரஷ்யாவில் அரசியல், பொருளாதார நெருக்கடிகள் மேலும் மோசம் அடைந்துள்ளன.


நேற்று முன்தினம் அதாவது திங்கட்கிழமை ரஷ்ய நாடாளுமன்றத்தில் பிரதமர் செர்நோமைடினின் நியமனம் அங்கீகாரத்துக்காக விடப்பட்ட போது கம்யூனிஸ்ட்டுகள் பெரும்பான்மை வாக்குகளால் அதனை நிராகரித்தது அரசியல் குழப்ப நிலையை மேலும் மோசமாக்கி உள்ளது.

கம்யூனிஸ்ட்டுகளை பெரும்பான்மையாகக் கொண்ட நாடாளுமன்றத்தில் செர்நோமைடினின் நியமனத்துக்கு எதிராக 251 வாக்குகளும் ஆதரவாக 94 வாக்குகளும் கிடைத்தன. நியமனத்துக்கான அங்கீகாரம் பெற 226 வாக்குகள் தேவை.

ஆனால் ரஷ்ய நாடாளுமன்றம் வாக்களித்து 2 மணித்தியாலத்துக்குள் செர்நோமைடினை யெல்ட்ஸின் மீண்டும் பிரதமராக நியமித்தார்.

ரஷ்யாவின் 1993 புதிய அரசமைப்புக்கு இணங்க ரஷ்ய நாடாளுமன்றமான டுமா ஜனாதிபதியின் நியமனம் ஒன்றை மூன்று தடவைகள் நிராகரிக்கும் போது ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலுக்கான திகதியை அறிவிக்கவேண்டும்.

(இ)



கிளின்ரனும் கிலாரியும்

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரனும் அவரது துணைவியார் கிலாரியும் திங்களன்று மொஸ்கோ விமான நிலையத்தில் வந்திறங்கிய போது எடுக்கப்பட்ட படம்.

யாழ்ப்பாணம்

## இஸ்ரேல் அமைச்சர் சீனா விஜயம்

இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் யிட்ஷாக் மோரிட்சாய் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை சீனாவுக்கு நான்கு நாள் விஜயம் மேற் கொள்கிறார்.

பொருளாதார ஒத்துழைப்பு, மத்திய கிழக்கு நிலைமை உட்பட பல்வேறு விடயங்கள் இந்த விஜயத்தின்போது விவாதிக்கப்பட உள்ளன. (இ)

# கொங்கோவில் யுத்த நிறுத்தம் செய்யுமாறு ஐ.நா. கோரிக்கை!

## வெளிநாட்டு துருப்புக்களை வெளியேறுமாறு அறிவிப்பு

கின்ஷாஸா, செப். 2

கொங்கோவில் யுத்த நிறுத்தம் செய்யுமாறு ஐ. நா. பாதுகாப்புச் சபை கோரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பான தீர்மானம் பாதுகாப்புச் சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சகல வெளிநாட்டுத் துருப்புக்களும் கொங்கோவில் இருந்து வெளியேற வேண்டும் என்றும் பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.



கொங்கோவில் அங்கோலா படை வீரர் ஒருவர் ஹெலிக்கொப்டர் ஒன்றுக்கு பாதுகாப்பு வழங்குகிறார்.

கொங்கோவில் தற்பொழுது நடைபெற்றுவரும் உள்நாட்டு யுத்தத்தில் ஜனாதிபதி கபீலாவுக்கு அங்கோலோ ஆதரவு அளித்து வருகிறது. அங்கோலாப் படைகள் கபீலாவின் அரச படைகளுடன் இணைந்து போரிட்டு வருகின்றன.

கபீலாவின் அரச படைகளை எதிர்த்துப் போராடி வரும் துட்சி இனக் கிளர்ச்சியாளர்களுக்கு றுவாண்டாவும், உகண்டாவும் ஆதரவு தெரிவித்துள்ளன.

உகண்டாப் படைகள் துட்சி கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவாக ஏற்கனவே கொங்கோவில் சண்டையிட்டு வருவதாக கபீலாவின் அரசு குற்றஞ்சாட்டி வருகிறது எனினும் உகண்டா இதனை ஏற்க மறுத்துள்ளது.

மொபுட்டுவை பதவி கவிழ்ப்பதற்கு கபீலா நடத்திய போரில் உகண்டாவும், றுவாண்டாவும் கபீலாவுக்கு ஆதரவு தெரிவித்திருந்தன.

தற்பொழுது துட்சி இன மக்கள் கொங்கோவில் இனப்படுகொலைக்கு உள்ளானதாக றுவாண்டாவும், உகண்டாவும் குற்றஞ்சாட்டி கிளர்ச்சிப்படைகளுக்கு ஆதரவு தெரிவித்து வருகின்றன.

உலக அரங்கில்

இதற்கிடையில் கொங்கோவின் தென்மேற்கு யுத்த முனையில் தனது இராணுவம் வெற்றி அடைந்திருப்பதாக கபீலா அறிவித்துள்ளார்.

சில வாரங்களுக்கு முன்னர் தலைநகர் கின்ஷாஸாவை கைப்பற்றும் அளவுக்கு கிளர்ச்சிப் படைகள் முன்னேறி இருந்தன.

இந்த யுத்தத்தில் சிம்பாப்வே, நமீபியா ஆகிய நாடுகளும் கபீலாவுக்கு ஆதரவு தெரிவித்துள்ளன. (இ)

## அங்கோலா அரசிலிருந்து யுனிட்டாவுக்கு கல்தா!

### மீண்டும் யுத்த அபாயம்

றுவாண்டா, செப். 2

அங்கோலா உள்நாட்டு யுத்தத்துக்கு தீர்வுகாண ஐ. நா. ஏற்பாட்டில் செய்து கொள்ளப்பட்ட சமாதான ஒப்பந்தம் குழம்பிப்போகும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

அங்கோலா நாடாளுமன்றத்தில் இருந்து யுனிட்டா இயக்கத்தைச் சேர்ந்த 4 அமைச்சர்களும் 7 உதவி அமைச்சர்களும் 17 எம். பிக்களும் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

ஐ. நாவினால் ஏற்படுத்தப்பட்ட தீர்வுத்திட்டத்துக்கிணங்கி யுனிட்டா தனது போராளிகளைக் கலைத்துவிட்டு ஆயுதங்களை அங்கோலா அரசிடம் ஒப்படைத்திருக்க வேண்டும்.

இதற்கான பல காலக்கெடுக்கள் முடிவடைந்த நிலையில் இறுதிக்காலக்கெடு ஒகஸ்ட் 31 ஆம் திகதிக்கு வைக்கப்பட்டிருந்தது.

யுனிட்டா இயக்கம் இதனை நிறைவேற்றத்தவறியதை அடுத்தே யுனிட்டாவைச் சேர்ந்த அமைச்சர்களும் உதவி அமைச்சர்களும் எம்பிக்களும் நாடாளுமன்றத்தில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

ஐ. நா. சமாதானதிட்டத்தை ஏற்றே யுனிட்டா இயக்கம் கூட்டரசில் அங்கம் வகிக்க இணங்கி இருந்தது.

தற்பொழுது யுனிட்டா உறுப்பினர்கள் வெளியேற்றப்பட்டிருப்பதால் அங்கோலாவில் மீண்டும் உள்நாட்டு யுத்தம் மூளும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

யுனிட்டா இயக்கத்திடம் 30 ஆயிரம் போராளிகள் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசில் அங்கம் வகிக்கும்கட்சி, தனக்கென தனிப் படையையும் ஆயுதங்களையும் வைத்திருக்க அனுமதிக்கப் போவதில்லை என்று அங்கோலா அரசு அறிவித்துள்ளது.

(இ)


### இஸ்லாமிய ஏவுகணை

## ஷெரீப் அறிவிப்பு குறித்து எதிர்க்கட்சிகள் கண்டனம்

இஸ்லாமாபாத், செப்,2.

பலவீனப்பட்டுவரும் தனது அரசியல் தளத்தைப் பாதுகாக்க பிரதமர் நவாஸ் ஷெரீப் நடத்துகின்ற சுயநல நாடகமே பாகிஸ்தானை இஸ்லாமியச் சட்டப்படி வழி நடத்துவதற்கு எடுத்துள்ள முயற்சி என எதிர்க்கட்சிகள் குற்றஞ் சாட்டியுள்ளன.

பாகிஸ்தான் மீது வீழ்ந்த அமெரிக்க ஏவுகணையால் எழுந்துள்ள அரசியல் நெருக்கடியை திசை திருப்ப ஷெரீப் ஏவியிருக்கும் ''இஸ்லாமிய ஏவுகணை'' இது என அவதானிகள் தெரிவிக்கின்றனர்.



அரசு சந்திக்கும் பிரச்சினைகளில் இருந்து மக்களின் கவனத்தைத் திசைதிருப்ப புனிதமான இஸ்லாத்தை ஷெரீப் தவறாக பயன்படுத்துகின்றார் என பெனாஸீர் பூட்டோ குற்றஞ்சாட்டியுள்ளார்.

பாகிஸ்தானை இஸ்லாமியப்படுத்தும் பிரதமரின் முயற்சி இஸ்லாத்தின் மகிமைக்கு பங்களிக்கப் போவதில்லை, மாறாக மது வெறியர்களுக்கும், பாசிச மனப்பான்மை கொண்டவர்களுக்கும் மேலும் சமுதாயத்தில் வெறியையும் பிளவுகளையும் உண்டாக்க உதவப் போகின்றது என்று பாகிஸ்தானின் தேசிய மனித உரிமை அமைப்பு கவலை தெரிவித்துள்ளது.

குர் ஆன் மற்றும் நபிகள் நாயகத்தின் போதனைகள் ஆகியவற்றை நாட்டின் அதி உயர் சட்டங்களாக ஆக்குவதற்கு ஷெரீப் முடிவு செய்ததை அடுத்தே மேற்படி கருத்தலைகள் வெளிவந்துள்ளன.

இதேவேளை பாகிஸ்தான் மக்கள் கட்சி நவாஷ் ஷெரீப்பின் இத்தகைய தீர்மானத்தை எதிர்த்து நாடு முழுவதும் அடுத்த வாரம் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளப்போவதாகத் தெரிவித்துள்ளது. (இ-ரி)

## ஜப்பானிய கடல் பகுதியில் வடகொரிய ஏவுகணை

பியாங்கொங், செப். 2

வடகொரியாவின் ஏவுகணை ஒன்று ஜப்பானிய தீவான கோன்சோ தீவுக்கு 500 கிலோ மீற்றர் தொலைவில் பசுபிக்சமுத்திரத்தில் வீழ்ந்தது.

சுமார் 2 ஆயிரம் கிலோ மீற்றர் வரை சென்று தாக்க வல்ல இந்த உந்துவிசை ஏவுகணை இலக்கு மாறியே ஜப்பானிய கடல்பகுதியில் விழுந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடகொரியாவின் இந்த நடவடிக்கைக்கு ஜப்பான் ஆட்சேபம் தெரிவித்துள்ளது. பாதுகாப்பான அணு உலைகளை நிர்மாணிப்பதற்காக வடகொரியாவுக்குச் செலுத்தப்பட வேண்டிய பணம் தொடர்பான ஒப்பந்தத்தில் கையெழுத்திட ஜப்பான் மறுத்துள்ளது.

அத்துடன் வடகொரியாவுக்கு 100 கோடி டாலர் வழங்குவதனையும் ஜப்பான் நிறுத்தியுள்ளது.

இதேவேளை வடகொரியாவின் ஏவுகணை பிரயோகத்தை ஒரு கவலைக்குரிய திருப்பம் என அமெரிக்கா அறிவித்துள்ளது.

தெல்லியூர் துர்க்காதேவி
தேர் சிறப்பு மலர்
நாளைய உதயனில்
சுன்னாகம்
துர்க்கா
...
வழங்குகிறார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறு விளம்பரம்

## தவறிவிட்டன

மானிப்பாய் நவாலி வடக்கைச் சேர்ந்த சிவராசா சதீஷ்குமாரின் தேசிய அடையாள அட்டை இல. 742071340V, விசேட அடையாள அட்டை இல. 0905002487, ஜொப்காட் ஆகியன மானிப்பாய்க்கும் ஓட்டுமடம் ஊடாகக் கஸ்தூரியார் வீதிக்கும் இடையில் 28-08-98 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இந்திரா நகையகம், 181, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும்.

(58841)

கடந்த 26-08-98இல் எனது ஐந்து பவுண் எடை உடைய கைச்சங்கிலி ஒன்று தவறிவிட்டது. இதைக்கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து S. விக்னேஸ்வரதாஸ், கோட்டைக்காடு, மல்லாகம் (கந்தசாமி கோயிலடி) எனும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். இது பற்றிய தகவல் கொடுப்பவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

(58826)

நிமதி சவரிமுத்து ஆகிய எனது விசேட, தேசிய, பல்கலைக்கழக அடையாள அட்டைகள் மூன்றும் (இல. 7172105 4V) 28-08-98 அன்று யாழ். போதனா வைத்திய சாலையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் யாழ் போதனா வைத்தியசாலை அலுவலகத்தில் ஒப்படைத்து உதவவும்.

(58943)

நவரட்ணம ரவீந்திரகுமார் ஆகிய எனது விசேட அடையாள அட்டை யாழ்ப்பாணத்தில் 30 ஆம் திகதி தவறிவிட்டது. எடுத்துத்தருபவருக்கு சன்மானம் தரப்படும. 69, நயன்மார் வீதி, நல்லூரில் ஒப்படைக்கவும்.

(58854)

இரண்டு கார் பதிவுப் புத்தகங்களும், பெயர்மாற்ற விண்ணப்பமும் வல்விபுர பரிய ரி ஒழுங்கைக்கும், கிராமக் கோட்டடிற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் எம். பரமேஸ்வரன் பைரவன் ரேடர்ஸ், கிராமக் கோட்டடி. பருத்தித்துறையில் ஒப்படைககவும். சன்மானம் வழங்கப்படும்.

(58852)

## யாழ்ப்பாணம

அராலியூர் ந. சுந்தரம் பிள்ளையின் நூல்கள் 1. யாழ்ப்பாணமா? கொழும்பா? நாடகநூல் 2. யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள். இடம்பெயர்தலின் கதை 3. நாடகம்எழுதுவது எப்படி? என்று விளககிக் கூறும் நூல் 50/- [58819]

## கோழிக்குஞ்சு விற்பனை

Prima Hyline Brown முட்டைக் குஞ்சுகள் Prima/Bairaha Broiler குஞ்சுகள் பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோசென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.

[58857]

## வீடு விற்பனைக்கு

சுண்டுககுளியில, 20 பேரின்பநாயகம் ஒழுங்கையில் (யாழ். செயலகத்திற்கு அண்மையில்) நான்கு பரப்பில் அமைந்துள்ள வசதியான வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திரு. J. J. அற்புதராஜா, 25, சோமசுந்தரம் அவன்யு, சுண்டுக்குளி.

(58862)

## வீடு தேவை

நால்வர் அடங்கிய சிறு குடும்பத்திற்கு வீடு வாடகைக்குத் தேவை. யாழ். இந்துக் கல்லூரிக்கு இரண்டு மைல் சுற்றாடலில் விரும்பத்தக்கது. பாதுகாப்பு அரணுக்கு அப்பால் இருப்பினும் பரிசீலனை செய்யப்படும். க. முத்துக்குமாரசாமி, பாரதி பதிப்பகம், 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(58831)

## தேவை

க. பொ. த. (சாதாரணம்), அல்லது க. பொ. த. (உயர் தரம்) கல்வித் தகைமையுள்ள பெண்பிள்ளை ஒருவர் எமது திருமண சேவையில் கடமையாற்றத் தேவைப்படுகிறார். விரும்புபவர்கள் நேரில் தொடர்பு கொள்ளவும்: துர்க்கா திருமண சேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(58853)

## கோழிகள் தேவை

Broiler இறைச்சிக் கோழிகள், பேட்டுக்கோழிகள் சேவல்கள்தேவை, தொடர்பு: நல்லூர் வீடியோசென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். [58858]

## விண்ணப்பப்படிவம்

அமெரிக்கா விசாபடிவமும் விவரமும் விற்பனையாகின்றன. விலை ரூபா 4. தபாலில் பெறுவதாயின் ரூ. 8 அனுப்பவும். நாயகபாலன் ஸ்ரோர்ஸ், மானிப்பாய்.

[58824]

# செயலக நடமாடும் சேவை

சுழிபுரம், செப். 2

வலிகாமம் மேற்கு செயலகத்தினர் நடத்தும் நடமாடும் சேவை கடந்த சனிக்கிழமை முற்பகல் 9 மணி முதல் விக்ரோறியாக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இச்சேவையால் சுழிபுரம், தொல்புரம், பொன்னாலை, மூளாய், பண்ணாகம், பனிப்புலம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பயன்பெற்றுள்ளனர் (இ: 28)

உ

சிவமயம்



வண்ணை - சாந்தையர் மடம்

## ஸ்ரீ கற்பக விநாயகர் கோயில்
## அலங்கார உற்சவம்

விநாயக அடியார்களே!

எல்லாம் வல்ல விநாயகர் திருவருளால் நிகழும் வெகுதானிய வருடம் ஆவணித் திங்கள் 10ஆம் நாள் 26-08-98 புதன்கிழமை முதல் 15 நாள்கள் ஷெ உற்சவம் நடைபெறுகின்றது. அக்காலங்களில் அடியார்கள் விநாயகப் பெருமானைத் தரிசித்து இஷ்டசித்திகளைப் பெற்றுய்வார்களாக.

### நிகழ்ச்சி நிரல்

| | | | |
|---|---|---|---|
| முற்பகல் | 8-00 மணி | — | காலைப் பூஜை |
| நண்பகல் | 12-00 மணி | — | உச்சிக்காலப் பூஜை |
| பிற்பகல் | 4-00 மணி | — | அபிஷேகம் |
| பிற்பகல் | 5-00 மணி | — | மாலைப் பூஜை |
| பிற்பகல் | 5-10 — 5-25 | — | திருமுறைப் பஜனை |
| பிற்பகல் | 5-30 மணி | — | வசந்தமண்டபப் பூஜை |
| பிற்பகல் | 5-45 மணி | — | விநாயகப் பெருமான் உள்வீதி உலா |

07-09-98 திங்கள் ஸ்ரீசுப்பிரமணியப் பெருமான் உற்சவம்

காலை 9-00 மணி உள்வீதி உலா

09 09 98 புதன் மு.பகல் 10மணி தீர்த்தோற்சவம்

10-09-98 வியாழன் வைரவப் பெருமானுக்கு விசேட பூஜை

தேவஸ்தானம். - தர்மபரிபாலன சபை

விளம்பர அன்பளிப்பு:

**கல்யாணி கிறீம் ஹவுஸ்**

73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

[58850]

# புதுமனை புகுவிழா

கொடிகாமம்

**A. V. M. கலர்ப்படக் கலையகம்**

நாள்: 03 - 09 - 98 வியாழன்

**அரைச்சலார்**

10 - 09 - 98 முதல் 25 - 09 - 98 வரை.

= A. V. M. போட்டோ

கண்டி வீதி,
கொடிகாமம்.

(58860)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 06 — 05 — 1912

மறைவு 12 — 09 — 1997

அமரர்

## சின்னையா குருநாதன்

(ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர்)

திதி: 02 - 09 - 98

எமது குல விளக்காய்த் திகழ்ந்து இவ்வுலகை விட்டுப் பிரிந்து, ஓராண்டு காலம் ஆகின்ற போதும் எமது மனங்களில தங்களின் நினைவு நீங்கவில்லை. தங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

தும்பளை வீதி,
பருத்தித்துறை

[சி/4738]

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 22 — 08 — 1950

உதிர்வு: 04 — 09 — 1997

திருமதி

## தேவநாயகி மகிழ்ராஜா

(நாயகி)

[ஆசிரியை, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி]

'உம்மை எமக்கு ஈந்தளித்த இறைவன் தம்முடன் என்றும் உம்மை வாழவைப்பார்.'

அன்னாரின் நினைவு ஆராதனை நல்லூர் புனித ஜேம்ஸ் பேராலயத்தில் 04-09-98 வெள்ளிக்கிழமை மாலை 4-00 (S.L.T) மணிக்கு நடைபெறும். இதில் கலந்து கொண்டு அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றுக்காகப் பிரார்த்திக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

49, இராசவீதி,
நல்லூர்.

(58851)

# G.A.Q. 1st in Com. (யாழ்.,பேராதனை பல்கலைக்கழகம்)

## வெளிவாரி கல்வியாண்டு 99/2000

A/L இல் (கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம்)

இவற்றில் 3 பாடங்கள் சித்தியடைந்தவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கத் தகுதி உடையவர்கள்.

இதற்குரிய பதிவுகள் எமது நிறுவனத்தால் செய்து தரப்படும்!

விரிவுரைகள் ஆரம்பம்: 26-09-98

விவரங்களுக்கு

S. அருள்நங்கை

**புதிய உயர் கல்லூரி,**

ஆரியகுளம் சந்தி, யாழ்.

(58847)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு உதவ விரைவில் கூட்டுறவு வங்கி

## அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்டாணம், செப். 2

யாழ். மாவட்ட விவசாயிகளுக்கும் மக்களுக்கும் உதவும் வகையில் கூட்டுறவுச் சபை வங்கி ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் யாழ். செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

விவசாயத் திணைக்கள உயர் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், வங்கி அதிகாரிகள் தொண்டர் நிறுவன பிரதிநிதிகள் கலந்து கொண்ட இக் கூட்டத்தில் பல்வேறு விடயங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

இக் கூட்டத்தில் அரச அதிபர் மேலும் கூறியதாவது;-

குறைந்த வட்டி வீத அடிப்படையில் விவசாயக் கடன்கள் வழங்க வங்கிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வானிலை அவதான நிலையம் ஒன்றை இங்கு ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். விவசாய விளை பொருள்களைப் பதப்படுத்தி தரத்தில் அடைத்து வெளிச் சந்தைக்கு அனுப்புதல் தொடர்பாக இந்திய தொழில் நுட்பம் இங்கு பின்பற்றப்பட வேண்டும்.

விவசாய கால்நடை சம்பந்தமான வெளியீடுகள் இங்கு கிடைக்க சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு ஏற்ற நடவடிக்கைகளை விவசாயத்திணைக்கள அதிகாரிகள் மேற் கொள்ள வேண்டும்.

விவசாயத் திணைக்களத்திலுள்ள ஆளணி பற்றாக்குறை தொடர்பான அறிக்கையை மாகாண சபைக்கு அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

அரச சார்பற்ற நிறுவனங்கள் தமது திட்டங்கள் தொடர்பாக செயலகத்துக்கு அறிவிப்பதுடன் கடன் திட்டத்தின் கீழ் 6 சதவீத வட்டிக்கு மேற்பட்ட வீத வட்டியின் கடன் வழங்கக் கூடாது.

செயற்றிட்டங்கள் மாவட்ட விவசாயக்குழு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டு பாதுகாப்பு அமைச்சு அனுமதி பெறப்படுதல் வேண்டும்.

இப்படி அவர்மேலும் தெரிவித்தார்.

(இ-5)

## புகலிடம் மறுக்கப்பட்ட

# தமிழர்களை டென்மார்க் திருப்பி அனுப்பும்!

கொழும்பு, செப். 2

அரசியல் புகலிடம் நிராகரிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களை டென்மார்க் நேரடியாக இலங்கைக்கே திருப்பி அனுப்பிவைக்கும்.

இதற்கான உடன்படிக்கையை டென்மார்க் வெளிவிவகார அமைச்சு இலங்கையுடன் செய்துள்ளது.

இந்த உடன்படிக்கையின் பிரகாரம் அரசியல் புகலிடம் நிராகரிக்கப்பட்ட நபரொருவர் சுய விருப்பத்தின் பிரகாரம் டென்மார்க்கை விட்டு வெளியேற முடியாது. இதனால் அந்நபர் வேறு ஒரு நாட்டுக்குச் செல்லும் உரிமை இழக்கப்படுகிறது.

அரசியல் புகலிடம் நிராகரிக்கப்பட்ட நபர் நேரடியாக இலங்கைக்கே நாடு கடத்தப்படுவார்.

இலங்கை அரசு இவரது பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கும் அடிப்படையில் மேற்படி உடன்பாடு அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ.21)

# சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் மரணம்!

யாழ்ப்பாணம், செப். 2

அச்சுவேலி வடக்கு பிரதான வீதியில் கடந்த ஞாயிறு இரவு 8மணியளவில் இடம்பெற்ற சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் தலையில் பலத்த காயமடைந்து பின்னர் மரணமானார்.

எதிர் எதிரே வந்த சைக்கிள்கள் மோதுப்பட்டதில் சைக்கிளில் பயணம் செய்தவர்களில் ஒருவரான இந்தக் குடும்பஸ்தர் அடிபட்ட நிலையில் கீழே விழுந்ததனால் தலையில் பலத்த காயம் ஏற்பட்டது.

அச்சுவேலியைச் சேர்ந்த நிக்கலஸ்பிள்ளை அலோசியஸ் மரியதாசன் (வயது 55) என்பவரே இவ் விபத்தில் காயமடைந்து பலியானவர் ஆவார்.

தலையில் காயமடைந்த வுடன் அச்சுவேலி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவரை அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்புவதற்கான ஆயத்தங்களை மேற்கொண்ட வேளை அங்கு அவர் மரணமானதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சடலம் மரணவிசாரணைக்காகவும், பிரேத பரிசோதனையின் நிமிர்த்தமும் யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்தச்சம்பவத்தில் எதிர்ப்பக்கமாக வந்து இவரது சைக்கிளுடன் மோதுண்டவர் என்ற சந்தேகத்தின் பேரில் இதே இடத்தைச் சேர்ந்த மார்ட்டீன் ஜெயக்குமார் (வயது 17) என்பவர் அச்சுவேலி பொலீஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

(ஐ-5-11-15-139)

# வன்னியில் இருந்து வந்த இளைஞரை காணவில்லை

யாழ்ப்பாணம், செப். 2

யாழ். குடாக்கடல் ஊடாக வன்னியிலிருந்து திரும்பிய இளைஞர் ஒருவர் காணாமற் போய் விட்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். செயலகத்தில் முறையிடப்பட்டுள்ளது.

அரியகுட்டி அரிபவானந்தன் (கரவெட்டி) கடந்த ஜூலை 25 ஆம் திகதி வன்னியிலிருந்து யாழ். குடாக்கடல் ஊடாக வந்த படகில் பயணம் செய்தார்.

அந்தப் படகில் வந்தவர்கள் குருநகருக்கு வருவதற்கு படையினரால் அனுமதி மறுக்கப்பட்டதை அடுத்து திரும்பிச் சென்றனர். திரும்பிச் சென்றவர்களில் பலர் கடலில் ஏற்பட்ட சுழியில் சிக்கினர், இதில் ஒரு பெண் கடலில் மூழ்கி இறந்ததும் சிலர் கரை சேர்ந்ததும் தெரிந்ததே.

இவர்களுடன் பயணம் செய்த மேற்படி இளைஞர் இதுவரை வீடு வந்து சேரவில்லை என்று உறவினர்கள் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர்.

(ஐ-5

# நீதிமன்ற ஊழியர்களுக்கு ஆபத்துக்காலப் படி

யாழ்ப்பாணம், செப். 2

யாழ். மாவட்டத்திலுள்ள நீதிமன்றங்களின் ஊழியர்களுக்கு ஆறு மாத காலத்துக்கான ஆபத்துக்காலப் படி வழங்கப்படவுள்ளது.

இதற்கான நிதியை நீதி அமைச்சு ஒதுக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த ஆபத்துக் காலப்படி விரைவில் இந்த ஊழியர்களுக்கு வழங்கப் படவுள்ளது.

ஏனைய திணைக்கள ஊழியர்களுக்கு ஒன்றரை வருடங்களுக்கான ஆபத்துகாலப்படி வழங்கப்படுகின்ற போதிலும் நீதிமன்ற ஊழியர்களுக்கு குறைந்த காலப் பகுதிக்குரிய கொடுப்பனவை வழங்குவதற்கே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவந்தது.

ஏனைய திணைக்களங்களுக்கு வழங்கப்பட்டது போன்று ஆபத்துக்காலப் படியை முழுமையாக வழங்க வேண்டும் என்று நீதிமன்ற ஊழியர்கள் நீதி அமைச்சிடம் விண்ணப்பித்துள்ளனர்.

(ஐ-5)

# பௌர்ணமி தின கருத்தரங்கு

நீர்வேலி, செப். 2

நீர்வேலி தெற்கு ஸ்ரீ முருகன் மாதர் ஐக்கிய நாணய சங்கத்தினர் மாதந்தோறும் பௌர்ணமி தினத்தில் நடத்தி வரும் கருத்தரங்கில் எதிர் வரும் 6 ஆம் திகதி ''மக்கள் வங்கியும் கடன் வசதிகளும்'' என்ற தலைப்பில் சுன்னாகம் மக்கள் வங்கி முகாமையாளர் க. ஆனந்தராசா கருத்துரை வழங்கவுள்ளார்.

(இ-8-110)

# விபத்தில் பெண் காயம்

யாழ்ப்பாணம், செப். 2

யாழ்ப்பாணம் நாலாம் குறுக்குத் தெருப்பகுதியில் திங்களன்று இடம்பெற்ற மினிபஸ், சைக்கிள் விபத்தில் இளம் பெண் ஒருவர் காயமடைந்தார். சைக்கிளும் பலத்த சேதமடைந்தது.

அதே இடத்தைச் சேர்ந்த பெனடிற் ஆன் கவிதா (வயது 19) என்ற இளம் பெண்ணே காயமடைந்தவராவார்.

இந்த விபத்தில் இளம் பெண் சைக்கிளைவிட்டுப் பாய்ந்து காயத்துடன் தெய்வாதீனமாக உயிர் தப்பித்துக் கொண்டார். மினிபஸ்ஸின் சில்லுக்குள் அகப்பட்ட அவரது சைக்கிள் பலத்த சேதமடைந்தது. காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ஐ-15-139)

# குளவி கொட்டிக் காயம்

தென்மராட்சி, செப். 2

மரத்திலிருந்து வீழ்ந்த பனை ஓலைக்குள்ளிருந்து பறந்த பெருங்குளவிகள் வீதியில் சைக்கிளில் வந்த தாயையும், மகனையும் கொட்டிய சம்பவம் கடந்த வியாழனன்று மாலை மிருசுவில் கொற்பலியில் இடம்பெற்றது.

குளவிகளின் கொட்டுக்கு இலக்காகிய இதேஇடத்தைச் சேர்ந்த வி. யோகராசா (வயது 12) என்பவர் சிகிச்சைக்காக சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ஐ-117)

## வாசகர் திருமுகம்

# உருக்குலைந்துள்ள வீதி

வண்ணார்பண்ணை மேற்கிலுள்ள சிவப்பிரகாசம் வீதியின் கணிசமான பகுதி பல வருடங்களாக கவனிப்பாரற்று குண்டும் குழியுமாகத் தோற்றமளிக்கிறது. இதனால் இவ்வீதியால் போக்குவரத்துச் செய்யும் மக்களும் வாகனங்களும் பெரும்பாதிப்புக்குக்குள்ளாகின்றன. கால்நடையாக போக்குவரத்துச் செய்யும் மக்கள் பரவலாகச் சிந்திச் சிதறிக்கிடக்கும் கற்களால் பெருமளவு துன்பத்தையும் துயரத்தையும் அடைகின்றார்கள்.

இவ் வீதியின் கணிசமான பகுதி மிகமோசமாக சிதைந்து சீரழிந்திருப்பதால் வாகனங்கள், மக்கள் கால்நடையாகப் போக்குவரத்துச் செய்யும் வீதியோரங்களை மோட்டார் சைக்கிள்கள், துவிச்சக்கரவண்டிகள் முதலியன ஆக்கிரமித்துள்ளதால் பாதசாரிகள் பெரும் ஆபத்தான விளைவுகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

வலிகாமம் மேற்கிலிருந்து நகரின் கடைத்தெருவிற்கு போக்குவரத்துச் செய்யும் பேருந்து முதலிய கனரக வாகனங்கள் அனைத்தும் போக்குவரத்துச் செய்யும் ஒரேயொருபாதை இதுவாகையால் இன்றைய நிலையில் இது முக்கியத்துவம் பெறுகிறது. இந்நிலையில் மாநகரசபையால் பராமரிக்கப்படும் இவ்வீதியின் கணிசமான பகுதி கவனிப்பாரற்று அனாதையாகியுள்ளது. இதுபற்றி பலதடவைகள் மாநகர ஆணையாளருக்கு மக்கள் விண்ணப்பித்திருந்தும் உரியபதில் கிடைக்கவில்லை.

வாகனங்களில் போக்குவரத்துச் செய்பவர்கள் மதவடி ஒழுங்கையூடாகவுள்ள குறுக்கு வழிக்குத் தள்ளப் பட்டுள்ளார்கள். இச்சிறிய ஒடுக்கமான ஒழுங்கையில் ''இளையதம்பி வித்தியாலயம்'' என்னும் ஆரம்பப் பாடசாலை உள்ளது. இதில் கல்வியிலும் பயமொன்றும் அறியாத இளம் சிறார்கள் அங்கும் இங்கும் ஓடியாடித்திரிவது கண் கூடு இப்பயங்கர சூழ்நிலையை இல்லாதொழிப்பதற்கு அதிகார பூர்வமாக எவரும் இதுவரை முன்வராதது மிகவும் வருந்தத்தக்கது.

மாநகர நிர்வாகம் தெரிவு செய்யப்பட்ட முதல்வரின் தலைமையிலுள்ள சபையால் பொறுப்பேற்கப்பட்டிருப்பதால் காலங்கடந்தாவது எமது துன்ப துயரங்கள் தீர வழி பிறக்குமா? என எதிர்பார்த்து பாதிக்கப்பட்டுள்ள மக்கள் சார்பில் இம்மடலை வரைகிறேன்.

மு. மகாலிங்கம்

யாழ்ப்பாணம்.

# புதியவருக்கும் சந்தர்ப்பம் வேண்டும்

11-08-98 உதயன் பத்திரிகையில் ''எழுதுவினைஞர் நியமனம்; மேலும் இழுத்தடிப்பது ஏனோ?'' என்ற தலைப்பில் வாசகர் திருமுகம் பகுதியில் வெளியான செய்தியை பாதிக்கப்பட்ட, பாதிக்கப்படவுள்ள அனைவரும் வரவேற்கிறோம். இச்செய்தியைப் பத்திரிகை மூலம் விளங்கச் செய்த (சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு) உதயன் பத்திரிகைக்கு எனது நன்றியை பாதிக்கப்படவுள்ளோர் சார்பில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

95ஆம் ஆண்டு நடைபெற்ற எழுதுநர் போட்டிப் பரீட்சையில் ஏற்கனவே பல தடவைகள் புள்ளிகளைக் குறைத்துக் குறைத்து நியமனம் வழங்கப்பட்டது. இப்பரீட்சை மூலம் மேலும் 1,500பேர் விரைவில் நியமிக்கப்படவுள்ள நடவடிக்கையானது; அண்மையில் பயிலுநர் ஆசிரியர்களைச் சேர்ப்பதற்காக புள்ளிகளை என்றுமில்லாதவாறு வெகுவாகக் குறைத்து நியமனம் வழங்கிய நடவடிக்கை போலவே காணப்படுகிறது.

96ஆம் ஆண்டு நடைபெற்ற பயிலுநர் ஆசிரியர்களைத் தெரிவதற்கான போட்டிப் பரீட்சைக்கு பல மாணவர்களுக்கு அனுமதி அட்டை கிடைக்காததனாலும், இடம் பெயர்வினாலும் பரீட்சைக்குத் தோற்றமுடியாமலிருந்தது. இதனால் இவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்;

97 ஆம் ஆண்டு நடைபெறவேண்டிய எழுதுநர் போட்டிப்பரீட்சை 98 ஆம் ஆண்டு ஜூன் 27 இல் நடைபெற்று ஏறத்தாழ ஒன்றரை மாதம் கடந்து விட்ட நிலையில், ''போட்டிப் பரீட்சை வைத்து எழுதுநர்களை நியமிக்கக் கால தாமதமாகும். இதனால் 95 இல் நடை பெற்ற எழுதுநர் போட்டிப் பரீட்சையிலிருந்தே 1500 பேர் நியமிக்கப்படவுள்ளனர்'' என்ற செய்தியை எவ்வாறு ஏற்றுக் கொள்வது?

எனவே பழைய பரீட்சைகளிலிருந்து புள்ளிகளை குறைத்துக் குறைத்து எழுதுநர்களை நியமிப்பதை விடுத்து, தற்போது நடைபெற்ற பரீட்சையின் பெறுபேறுகளை விரைவாக அனுப்பி அதிலிருந்து எழுதுநர்களை சேர்த்துக் கொள்வதே பல வழிகளிலும் பாதிக்கப்பட்ட, பாதிக்கப்படவுள்ள அனைவருக்கும் திருப்தி தரக்கூடிய ஒரு நடவடிக்கையாகும். இதனைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் புரிந்து கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனப் பாதிக்கப்பட்ட, பாதிக்கப்படவுள்ள அனைவோர் சார்பாகவும்கேட்டுக் கொள்கின்றேன்.

புத்தூர். ஞா. ஞானசம்பந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திறப்புவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் வெகுதானிய வருடம் ஆவணித் திங்கள் 18 ஆம் நாள் (03-09-1998) வியாழக்கிழமை காலை 9-04 மணிமுதல் 10-56 மணி வரையுள்ள சுபமுகூர்த்த சுபவேளையில்

எம்மால் புதிதாக ஆரம்பிக்கவிருக்கும்

### ஜெய கிருஷ்ணா ஜுவல்லர்ஸ்
### JAYA KRUSNA JEWELLERS

என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பித்து தங்களை மகிழ்விக்க இருப்பதால் அவ்வமயம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்
T. பாலசுப்பிரமணியம்

158, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(58816)


## ஆலயம் புனரமைப்பு

நெல்லியடி, செப். 2

கடந்தகால அனர்த்தங்களினால் பெரும் சேதமடைந்திருந்த அச்சுவேலி, பத்தைமேனி, மிட்டிலாங்கூடல் நடராஜ அம்பலவாணர் விநாயகர் ஆலயம் சுமார் எட்டு இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டுள்ளது.

(இ-8-109)

## நியமனமும் இடமாற்றமும்

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவு சமூக அபிவிருத்தி உத்தியோகத்தராக க. இராமச்சந்திரா நியமிக்கப்பட்டுள்ளதுடன் ஏற்கனவே இப்பதவியை வகித்த சி. பகீரதன் ஊர்காவற்றுறை சமூக அபிவிருத்தி உத்தியோகத்தராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறையில் இப்பதவியை வகித்த திருமதி பு. பாலசுப்பிரமணியம் மருதங்கேணிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

(இ-5)

## முல்லை. செயலகம் முன் தொடர்ந்தும் மறியல்

வவுனியா, செப். 2

முல்லைத்தீவு அரச செயலகத்தின் முன்பாக திங்களன்றும் ஆயிரக்கணக்கான மக்கள்நிவாரண வெட்டைக் கண்டித்து ஆர்ப்பாட்டத்திலும்மறியற் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

அரசு புதிதாக அறிமுகம் செய்துள்ள நிவாரண வெட்டைக் கண்டித்து இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதியில்மக்கள் தொடர்ந்து ஆர்ப்பாட்டத்திலும், மறியற் போராட்டத்திலும் ஈடுபட்டுவருவது தெரிந்ததே. இந்தப் போராட்டங்கள் காரணமாக அப்பகுதிகளில் அரசசெயலகங்களும், உதவி அரச அதிபர் பணிமனைகளும் 27 ஆவது நாளாக திங்கட்கிழமையும் செயலிழந்து காணப்பட்டன.

(ஐ-9)


## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
## பரிசுத்தினம்

காலம்: 4-9-98 வெள்ளிக்கிழமை
மு.ப. 9.30 மணி
இடம்: குமாரசாமி மண்டபம்

பிரதம விருந்தினர்
திரு. இ யோகநாதன் அவர்கள்
(மேலதிகச் செயலாளர், கல்வி உயர்கல்வி அமைச்சு)

பெற்றோர், பழையமாணவர், நலன்விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர், மாணவர்கள்-

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(சி/4736)



நல்லூர் முருகன் சன சமூக நிலையம்

## அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

நல்லூர் முருகன் சன சமூக நிலைய முன்றலில் 30 - 08 - 1998 ஞாயிறு மாலை இடம்பெற்ற சீட்டிழுப்பின் முடிவுகள்:

| | | |
|---|---|---|
| முதலாம் பரிசு | - இலக்கம் | 0757 |
| இரண்டாம் பரிசு | - ,, | 4536 |
| மூன்றாம் பரிசு | - ,, | 3037 |

ஆறுதற் பரிசுகள் - இலக்கம்: 4717 1666 1357 2611
,, 0393 4177 0176 2191
,, 2598 2368

பரிசுக்குரிய சீட்டுக்களை 06 - 09 - 98 ஞாயிறு பி. ப. 4-00 மணிக்குப் பிந்தாமல் சனசமூக நிலைய நிர்வாகத்திடம் ஒப்படைத்து உரிய பரிசில்களைப் பெற்றுக் கொள்ளவும்.

க. குமாரசுவாமி
தலைவர்

ந: மு: ச. ச. நி.
செட்டித் தெரு,
நல்லூர்.

(58833)


## உழவு வேலைகள் ஆரம்பம்

நீர்வேலி, செப். 2

அண்மையில் பெய்த மழையினால் காலபோக நெற்செய்கைக்காக குடா நாட்டு நெற் செய்கையாளர்கள் தமது வயல் நிலங்களை உழுது பண்படுத்துவதையும், வரமபுகள் கட்டிப் பராமரிப்பதையும் காணக்கூடியதாகவுள்ளது.

(இ 86-11)


## கபிரியேல் பெயின் ஒயில்

(நோ எண்ணெய்)

எட்வேட் சுதேச மருத்துவ நிலையம்
24, பஸ் நிலையம்,
யாழ்ப்பாணம்.

(58848)



## கணேசன் கொமினிக்கேஷன்

(பவலூம் கடை)

துரைவீதி, இணுவில்.

உள்நாட்டு வெளிநாட்டு நேரடித் தொலைத் தொடர்புகளை விரைவாகவும் சுலபமாகவும் குறைந்த கட்டணத்துடன் பெற்றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்

கணேசன் கொமினிக்கேஷன்!

தங்கள் நல்வரவை நாடும்
கணேசன் கொமினிக்கேஷன்
துரைவீதி. இணுவில்.

இலக்கம் - உள்நாடு - 070 - 212293
வெளிநாடு - 0094 - 70 - 212293

[58842]


## மீள்கேள்வி அறிவித்தல்

### நல்லூர் பிரதேச சபை, திருநெல்வேலி

கீழ்க் குறிப்பிடப்பட்ட இறைச்சிக் கடையை 10-09-98 தொடக்கம் 31-12-98 வரையிலான காலப்பகுதிக்கு குத்தகைக்கு விடுவதற்கான கேள்வி என்னால் கோரப்படுகின்றது.

1) கேள்விப்பத்திர விநியோகம்: 07 - 09 - 1998ஆம் திகதி திங்கட்கிழமை பி. ப. 3-00 மணி வரை.
2) கேள்விப்பத்திரம் ஏற்கும் திகதியும், நேரமும் 08-09-98 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 11-00 மணி
3) கேள்வி திறக்கும் திகதியும், நேரமும் 1998-09 08 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி. ப. 1-30 மணி

இந்தக் கேள்வி தொடர்பாக மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம். ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது.


க. மணிபல்லவராஜன்
தலைவர்
நல்லூர் பிரதேச சபை,

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி 31-08-98.

| இறைச்சிக்கடை | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரம் | மீளளிக்கப் படும் கேள்விப் வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய குறைந்த தொகை |
|---|---|---|---|
| 1) திருநெல்வேலி சந்தை ஆட்டிறைச்சிக்கடை - கடை 1 | 250/- | 3,000/- | 26,050/- |
| 2) ஆடியபாதம் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 250/- | 3,000/- | 14,200/- |
| 3) கொக்குவில் உப அலுவலகம் ஆட்டிறைச்சிக்கடை | 250/- | 3,000/- | 11,650/- |
| 4) இணுவில் 4 ஆம் கட்டை ஆட்டிறைச்சிக்கடை | 250/- | 3,000/- | |

(சி/4729)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு 08 - 09 - 1941
இறப்பு 03 - 08 - 1998

### திருமதி டொலறோஸ் பாக்கியநாதன்
(தையல் அன்ரி)

அன்புத்தாயே!

எங்கள் குடும்பத்தில் ஒளி வீசிய வெண்மதியே! 31 நாள்கள் என்ன எமது இறுதி மூச்சு வரையும் உங்கள் இனிய முகத்தையும், அன்பையும், பாசத்தையும் என்றும் மறவோம்.

அன்னாரின் மரணச்சடங்குகளில் கலந்து, எமது துயரில் பங்கு கொண்டோருக்கும், அனுதாபச் செய்திகளை அனுப்பியோருக்கும், எமக்கு பல வழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எமது நன்றியைத்தெரிவிக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
அன்புக்கணவர்: ரி. ஈ. பாக்கிய நாதன்,
(ஓய்வு பெற்ற அரச நில அளவையாளர்)
பிள்ளைகள்: யூலியன் நிர்மலராஜ்,
(நில அளவை அலுவலகம், யாழ்ப்பாணம்.)
றோபேட் நீசாகரன்,
ஸ்ரெலா மரியா -
மருமகன்: பெஞ்சமின் றொபின்சன் - நோர்வே
பேரன்: றொ. விவியன்.

12/1, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(58633)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# உதயன்

## பந்து அரசிடம்

இராணுவக் கொள்கையைக் கைவிட்டு, திம்புப் பேச்சுக்களின் அடிப்படையில் பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு இலங்கை அரசாங்கத்தை வற்புறுத்துங்கள்.

இவ்வாறு அணிசேரா நாடுகளின் தலைவர்களிடம் தமிழீழ விடுதலைப் புலிகள் கேட்டுள்ளனர்.

நீண்ட கால விவகாரமான இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வே அவசியம், அதனை வகுப்பதற்கு அரசாங்கமும். விடுதலைப் புலிகளும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்— இவ்வாறு சமீப காலமாக பலராலும் வற்புறுத்தப்பட்டு வருகிறது.

மேலும், விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அரசாங்கத்தின் மீது அழுத்தம் போடுமாறும் வெளிநாடுகளிடம் அடிக்கடி கோரப்பட்டும் வருகிறது.

ஆனால் இம்முறை, தம்முடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இலங்கை அரசு மீது அழுத்தம் போடுமாறு விடுதலைப் புலிகளே 113 நாடுகளின் தலைவர் களிடம் கேட்டிருக்கிறார்கள்.

இது முற்றிலும் புதிய சூழ்நிலையைத் தோற்றுவித்துள்ளது. இனப்பிரச்சினை தொடர்பாக அரசாங்கத்துடன் பேசுவதற்கு விடுதலைப் புலிகள் தயார் என்பதனை அவர்கள் வெளி உலகத்துக்குத் தெளிவு படுத்தி உள்ளார்கள்.

அரசாங்கத்தைப் பொறுத்த வரையிலும், போர் நடைபெற்றாலும் — போரைத் தொடர்ந்து நடத்தினாலும் — விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் தயார் என்றே கூறிவருகிறது. விடுதலைப் புலிகளைத் தடை செய்துள்ள போதிலும் அவர்களுடன் பேசுவதற்கான கதவுகள் திறந்தே உள்ளன என்று அரசுத் தலைவர்கள் அறிவித்து வருகிறார்கள். ஜனாதிபதி சந்திரிகா மிக அண்மையிலும் இதனைத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று கூறிய போதிலும், உள்ளூர அவர்களுக்கு அதில் விருப்பம் இல்லை; வெறும் பேச்சுக்கே அவ்வாறு சொல்லுகிறார்கள் என்ற கருத்தை அரசு பிரபல்யப்படுத்தி வருகிறது.

ஆனால் இனிமேல் அவ்வாறு கூற முடியாது.

பேச்சுவார்த்தைக்கு வருமாறு இலங்கை அரசிடம் வற்புறுத்துமாறு வெளிநாடுகளிடம் கோரியதன் மூலம் பேச்சுவார்த்தையில் தமக்குள்ள உண்மையான அக்கறையை விடுதலைப் புலிகள் தெளிவாக்கி உள்ளார்கள்; உறுதிசெய்துள்ளனர்.

ஆகையால், அரசாங்கம் இது விடயத்தில் பல தரப்பாரும் விரும்புவது போல, அவர்கள் கேட்பதனைக் கவனத்தில் கொண்டு, விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

பேச்சுவார்த்தைக் காலத்தை, தம்மைப் பலப்படுத்துவதற்குப்பயன்படுத்தும் நோக்குடனேயே விடுதலைப் புலிகள் வெளிநாடுகளிடம் இவ்வாறு ஒரு கோரிக்கையை முன் வைத்திருக்கின்றனர் என்றுகூறித் தட்டிக்கழிக்கக் கூடாது.

பந்து இப்போது அரசின் பக்கமே விழுந்துள்ளது.

# அரசும் புலிகளும் பேசுவதற்கு

# மூன்றாந்தரப்பு உதவி அவசியம்

போரில் ஈடுபட்டுள்ள அரசாங்கமும் விடுதலைப் புலிகளும போரை நிறுத்தி பேச்சு வார்த்தை நடத்த முன்வர வேண்டும் என்பதே எமது விருப்பமாகும்.

இரு தரப்பினரும் ஒருவரை மற்றவர் நம்பும் நிலையில் தற்சமயம் இலலை. ஆகவே மூன்றாந் தரப்பு ஒன்று இதில் தலையிடவேண்டிய நிலை உள்ளது.

இந்தியப் பிரதமர் இலங்கைத் தமிழர் விவகாரத்தை மூடிவிட்டார் எனக் கருதுவது தவறானது.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரம் மேற்கண்டவாறு கருத்துவெளியிட்டார்.

டுள்ள அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் போரை நிறுத்தி பேச்சுக்கு முன்வர வேண்டும் என்பதே எமது

அயல் நாடு மட்டுமன்றி தமிழர்கள் நியாயமான எண்ணிக்கையில் அங்கும் வாழ்கிறார்கள்.

ஒருமுறை தலையிட்டு இந்தியா தோற்று விட்டது என்பது உண்மை என்றாலும் கூட, அதற்கான காரணங்களை அலசிக் கொண்டிராமல், புதிய முயற்சியில் இந்தியா ஈடுபட வேண்டும் என்பதே எமது எண்ணமாகும். இந்தியா மீது சந்தேகம் கொள்ளாமல் இருசாராரும் இந்தியாவின் நல்லெண்ணத்தைப் பயன்படுத்திச் சமர

பதில்: செம்மணியில் உள்ளதாகக் கூறப்படும் மனித புதைகுழிகள் குறித்து உடன் நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியைக் கோரியுள்ளோம். அத்துடன் மனித உரிமைக் குழுக்களுக்கு முழு விவரங்களையும் தெரியப்படுத்தியுள்ளோம்.

அவர்கள் இது தொடர்பாக நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். அத்துடன் இந்த விவகாரம் தொடர்பாக இரகசியப் பொலீஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

வெளிநாட்டு நிபுணர்களை அழைத்து புதைகுழியைத் தோண்ட ஏற்பாடு செய்யுமாறும் கேட்டுள்ளோம். சட்டமா அதிபர் தொடர்ந்து சம்பந்தப்பட்டவர்களுடன் ஆராய்கிறார்.

விரைவில் சோமரத்ன ராஜபக்ச செம்மணிக்கு கூட்டிச் செல்லப்பட்டு மேலும் விசாரணைகள் நடைபெறவிருக்கின்றன. விரைவில் இந்த விடயத்தில் முடிவு காணப்படும் என நம்புகின்றோம்.

கேள்வி: கிழக்கில் தொடரும் குடியேற்றங்களைத் தடுக்க ஏதாவது நடவடிக்கை எடுத்துள்ளீர்களா?

# இந்தியா எமது விவகாரத்தை மூடிவிட்டதாகக் கருதுவது தவறு

நோய் வாய்ப்பட்ட நிலையில் கொழும்பு திம்பிரிகலவில் உள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் இன்முகத்துடன் வரவேற்றார். பேட்டியின் இடையில் உணர்ச்சிவசப் பட்டவராகச் சில கருத்துக்களை அவர் வெளியிட்ட போது, முதுமை காரணமாக மூச்சு வாங்கியது.

சிம்மக்குரலோன் எனப் பெயர்பெற்று அரசியல் மேடைகளில்கர்ச்சித்து வந்த அவர் அமைதியான குரலில் உதயனுக்கு அளித்த பேட்டி விவரம வருமாறு:

கேள்வி: அரசு முன்வைத்துள்ள அதிகாரப்பரவலாக்கல் பொதி நிறைவேறுமா? அதன்மூலம் தமிழ்மக்களுக்கு விடிவு ஏற்படுமா?

பதில்: இனப்பிரச்சினைக்கு போர் மூலம் தீர்வு காண முடியாது. ஆகவே இருதரப்பும் போரை நிறுத்தி சமாதானப் பேச்சு வார்த்தைக்கு

விருப்பமாகும்.

இருதரப்பினரும் ஒருவரை மற்றவர் நம்பும் நிலையில் தற்சமயம் இல்லை. ஆகவே மூன்றாந் தரப்பு ஒன்று



இதில் தலையிடவேண்டிய நிலை உள்ளது.

மூன்றாம் தரப்பாக ஒரு நாடோ அல்லது நாடுகளோ தலையிட்டு இரு தரப்பையும்

சம் காண்பதே சிறந்தது என்பதே எமதுகருத்தாகும்.

அண்மையில் இலங்கை வந்த இந்தியப்பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றிக் கருத்து எதுவும் கூறாததால், இந்தியப் பிரதமர் இலங்கைத் தமிழர் விவகாரத்தை மூடிவிட்டார் என எண்ணுவது தவறானதாகும்.

### உதயன் அலுவலகப் பிரதிநிதி
### ஞா. குகநாதன்

முன்வர வேண்டும்.

அரசாங்கம் முன்வைத்துள்ள அதிகாரப்பரவலாக்கல் யோசனைகள் பேச்சுக்களின் அடிப்படையாக அமையலாம், அதில் பல சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டும். அதன் மூலம் தீர்வு கிட்டலாம் என நம்புகிறோம்.

எனவே போரில் ஈடுபட்

பேச வைக்கவேண்டியது அவசியமாகும்.

கேள்வி; பேச்சுக்களுக்கு மூன்றாந்தரப்பு நாடாக இந்தியா தலையிட வாய்ப்பு உண்டா?

பதில்: அதற்கு வாய்ப்பு உண்டு இந்தியா தலையிட பல விதமான உரிமைகள் அந் நாட்டுக்கு உண்டு. இந்தியா எமது நாட்டுக்கு

## கூட்டணித் தலைவர் சிவசிதம்பரம் உதயனுக்குப் பேட்டி

தமிழ்க்கட்சிகளுடன் நடந்த சந்திப்பின் போது, தமிழ்க்கட்சியினர் தெரிவித்த விடயங்களை நன்றாகக் கவனத்தில் அவர் எடுத்துள்ளார். அதற்கு மேலாக இலங்கை விவகாரங்களுக்கான அதிகாரிகளையும் அவர் தன்னுடன் வைத்திருந்தார். நாங்கள் தெரிவித்த விடயங்களை அவர்கள் கரிசனையுடன் குறித்துக் கொண்டனர்.

இந்தியா என்ன நிலைப்பாட்டை எடுக்கும் என்று கூற முடியாது. ஆனாலும் தமிழர்களின் நலன்களைப் பாதுகாப்பதாக அந்த நிலைப்பாடு இருக்கும் என நம்புகிறோம்.

கேள்வி: செம்மணியில் மனித புதைகுழிகள் உள்ளதாக வெளிவந்துள்ள தகவல் குறித்து தங்கள் கட்சிஎன்ன நடவடிக்கை எடுத்துள்ளது.

பதில்: கிழக்கில் அத்து மீறி குடியேற்றங்கள் நடப்பது குறித்து எமது செயலாளர் நாயகம் இரா. சம்பந்தன் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார். குடியேற்றங்களை நிறுத்துமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

இரா. சம்பந்தன் இது விடயத்தில் முழு நேரத்தையும் செலவிட்டு அதைத்தடுப்பதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

இந்திய அமைதிப்படை இருந்த சமயம் கிழக்கில் அத்தனை சிங்களவர்களும் கோட்டைக்குள் பதுங்கினார்கள் என்பதை ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும். இந்திய அமைதிப்படை போனது அவர்கள் அத்துமீறிக்குடியேறி வருகின்றனர். இது நிறுத்தப்படவேண்டும்.

★

## கடந்த சிறு போகத்தில்

# 1,112 ஹெக்டேயரில் உப உணவு மரக்கறி

யாழ்ப்பாணம், செப். 2

யாழ். மாவட்டத்தில் கடந்த சிறு போகத்தில் உப உணவு 73 ஹெக்டேயரிலும், மரக்கறி 382ஹெக்டேயரிலும் செய்கை பண்ணப்பட்டன.

மிளகாய், பெரிய வெங்காயம், சின்னவெங்காயம், குரக்கன், கௌபி, நிலக்கடலை, பயறு, மரவள்ளி, வத்தாளை, சிறுதானியம் போன்ற உப உணவுப் பயிர்களும் தக்காளி, கோவா, கரட், பீற்றூட், முள்ளங்கி, வெண்டி, பயிற்றை, புடோல், பூணிச, பாகல், கத்தரி போன்ற மரக்கறிப் பயிர்களுமே ஆயிரத்து 112 ஹெக்டேயரில் செய்கை பண்ணப்பட்டன.

(இ-5)

### நாளை

ஆவணி - 18

வியாழக்கிழமை

திதி: துவாதசி

முன்இரவு 09.37 வரை.

நட்சத்திரம்: உத்தராடம்

முன்இரவு 08.28 வரை.

சுபநேரம்: 07,35 - 09.05

ராகுகாலம்: 01.35 - 03.05

(பகலுக்கும் இரவுக்கும் பழையநேரப்படி)

### உதயவாக்கு

அடக்கம் என்பது சுடரில் வீசும் ஒளியைப் போன்றது. அறிவைப்பெற மனத்தை யும், வாய்மையைப் பெற இதயத்தையும் அடக்கம்தான் பக்குவப்படுத்துகிறது.

— பிரான்ஸிஸ் கிஸோட்

# பரிசு பெற்றவர்களுக்கு பயண ஏற்பாடுகள்

தேசிய நல்லிணக்க சபை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து நடத்திய வானொலி நாடக பிரதியாக்கப் போட்டியில் பரிசு பெற்ற 7 பேர் கொழும்பு சென்று பரிசளிப்பு நிகழ்வில் கலந்து கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பரிசு பெற்றவர்கள் இன்று புதன்கிழமை 3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணத்திலுள்ள சிவில் நிர்வாகக் காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு பயண விவரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என அறுவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்படி போட்டியில் பரிசு பெற்றோர்விவரம் வருமாறு:

★ என். சுந்தரம்பிள்ளை (30, கந்தசாமி வீதி, நீராவியடி)

★ பி. வேதநாயகம் (தும்பளை தெற்கு, பருத்தித்துறை)

★ திருமதி.ஜே.சிவப்பிரகாசம் (சேகடைச்சாமிஒழுங்கை, யாழ்ப்பாணம்)

★ கே. சிவபாலசுந்தரம் (திரு வீதி, உரும்பிராய்)

★ எஸ். சிவராசா (கராத்திக்குழி கிழக்கு, கைதடி)

★ செல்வி எஸ். நாகேந்திரன் (மகாத்மா வீதி, நெல்லியடி)

★ செல்வி. ரஜிதா கனகரட்ணம் (மகாத்மா வீதி, நெல்லியடி). (இ-8-154)

## புதிய நிர்வாக சபை

குருநகர், செப். 2

குருநகர் அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் புதிய நிர்வாசபை சி. சிலுவைதாசன் தலைமையில் அண்மையில் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

(இ-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதை உருளைக்கிழங்கு அடுத்த மாதம் விநியோகம்

யாழ்ப்பாணம், செப். 2
விதை உருளைக்கிழங்கு பெறுவதற்கு விண்ணப்பித்துள்ள விவசாயிகளுக்கு அடுத்தமாதம் விதை உருளைக்கிழங்கு விநியோகிக்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட விவசாயக்குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டதை விட மேலும் 100 மெ. தொன் விதை உருளைக்கிழங்கு யாழ்ப்பாணத்துக்கு தருவிக்கப்படவுள்ளதாக இக்கூட்டத்தில் கலந்து கொண்ட கமநல சேவைகள் திணைக்கள அதிகாரி தெரிவித்தார்.

ஒக்ரோபர் மாத முடிவுக்குள் விதை உருளைக்கிழங்கு விநியோகிக்கப்பட வேண்டும் எனவும்—

சென்ற தடவையை விட முன்பதாக விநியோகிக்க நடவடிக்கை எடுக்குமாறும்— யாழ். அரசாங்க அதிபர் கமநல சேவைகள் திணைக்களத்திற்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

[இ-5]

## யாழ். மாவட்ட மூலவளங்கள் பற்றிய விவரம் திரட்டப்படுகிறது

யாழ்ப்பாணம், செப். 2
திட்ட அமுலாக்கல், நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சின்வேண்டுகோளுக்கு அமைய யாழ். மாவட்டத்தில் உள்ள மூலவளங்கள் பற்றிய விவரங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாகத் திரட்டப்பட்டுவருகின்றன.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் விவசாயம், கைத்தொழில் பற்றிய தற்போதைய நிலைகளும்—

கல்வி, சுகாதாரம், மின்சாரம், நீர்ப்பாசனம் ஆகிய வற்றிற்கான மூலவளங்களின் தேவைகள் குறித்த விவரங்களும்— தற்போது திரட்டப்பட்டு வருகின்றன.

பிரதேச செயலர் பிரிவு ரீதியாகத் திரட்டப்படும் விவரங்களை அடிப்படையாகக்கொண்டே குறிப்பிட்ட பிரதேச செயலர் பிரிவுகளுக்கான தேவைகள் குறித்து திட்ட அமுலாக்கல், நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சு தீர்மானிக்கும் எனத்தெரிவிக்கப்பட்டது.

(இ-7)

## மைதானம் புனரமைப்பு

சுழிபுரம், செப். 2
சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தை சமப்படுத்தும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வேலைகள் முடிவடைந்ததும் மேற்படி பாடசாலை மாணவர்களின் பாவனைக்கு இம் மைதானம் விடப்படும்.

(இ-8-28)

## அறிவித்தல்

கிறிஸ்தவ [ஆவிக்குரிய]
கருத்தரங்கும் வேதப்படிப்பும்

இல. 136, புகையிரதநிலைய வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள இரட்சிப்பின் சத்தம் விசுவாசிகள் ஐக்கியம் (கிறிஸ்தவ ஸ்தாபனம்) என்னும் இடத்தில் கிறிஸ்தவ கருத்தரங்கும் ஆவிக்குரிய வேதப்படிப்புகளும் நடைபெறும்.

நிகழ்ச்சி

நேரம்: காலை 9.00 மணி முதல்
பிற்பகல் 2.00 மணி வரை.

நாள்: 03-09-98 வியாழன் முதல்
05-09-98 சனி வரை.

வேதப்படிப்புகளை வழங்குபவர்:
அருள்திரு G. J. கிளரண்டன்

அனைவரும் வந்து ஆசீர் பெறுக.

- சபை நிர்வாகம்

இரட்சிப்பின் சத்தம்
இல. 136, புகையிரத நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

[58861]

## சங்கீத சபை பரீட்சை விண்ணப்பங்கள்

குருநகர், செப். 2
வடஇலங்கை சங்கீத சபை 1999ஆம் ஆண்டில் நடத்த உள்ள பரீட்சைகளுக்கான விண்ணப்பப் படிவங்களை தற்போது பெற்றுக்கொள்ள முடியும் என வடஇலங்கை சங்கீத சபைக் காரியாலயம் தெரிவித்துள்ளது. (இ-8-51)

## நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம், செப். 2
சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அமரர் வி. சிவசுப்பிரமணியம் நினைவுப் பேருரை இன்று புதன்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில், அதிபர் க. சிவாஜி தலைமையில் நடைபெறவுள்ளது.


''உலக அரங்கில் தமிழ்'' என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் நினைவுப் பேருரையை நிகழ்த்துவார்.

(இ-8)

## மதகுகள் அமைப்பு

சுழிபுரம், செப். 2
சுழிபுரம்-மூளாய் பிரதான வீதியில் மூளாய் பிள்ளையார் கோயிலுக்கும் பாணாவெட்டிக்கும் இடையில் உள்ள இடத்தில் புதிதாக இரண்டு இடங்களில் தண்ணீர் ஓடும் மதகுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. (இ-28)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 12 | 03 |
| 05 | 08 |
| 1931 | 1998 |

அமரர்
**பெரியதம்பி தம்பிஐயா**
(யாழ். ஜொடி சின்னத்தம்பி)

எங்கள் அன்புத் தெய்வமே ஐயா!
மாதம் ஒன்று சென்றாலும் மாசில்லா
உங்கள் அன்புமுகம் மறக்க முடியவில்லை?
பாசமுடன் எமை வளர்த்த தந்தையே!
உமை நித்தமும் நினைந்து வாடுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, மகள்மார், மகன்மார், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்.

தகவல்:
மகள், மருமகன்
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (58865)

## 90 ஆம் நாள் நினைவலைகள்



| ஆண்டவன் படைப்பு | அநியாய அழிப்பு |
|---|---|
| 10 | 05 |
| 03 | 06 |
| 1942 | 1998 |

அமரர்
**சின்னத்தம்பி நமசிவாயம்**
(சமாதான நீதிவான்)

உரிமையாளர்: சிவகுமார் ஸ்ரோர்ஸ்
முன்னாள் செயலாளர் யாழ்ப்பாணம் வணிகர் கழகம்
உப தலைவர்: தமிழர் விடுதலைக் கூட்டணி, யாழ் மாவட்டம்
திதி: 02 — 09 — 1998

உதவி என்று வந்தவர்க்கு உடன் நின்று தோள் கொடுத்தீர்
உமைப் பிரிந்து நாள்கள் தொண்ணூறு சென்றதே.
ஊருக்குப் பாடுபட்ட உத்தமன் உயிரை
எமனாய் வந்து வான் கொண்டு பறித்தனரே.
உள்ளதைச் சொல்லி நல்லதைச் செய்து உயர்ந்தவன் உயிரை
உணவருந்தச் செல்கையிலே அழித்தனரே!
பொதுப்பணியோடு திருப்பணி செய்த தொண்டனின் உயிரை
கொடூரமாய்ப் பலியெடுத்தனரே!
வணிகர் போற்றிய வணிகனின் பொது வாழ்வை
வஞ்சனையால் வழியினிலே முடித்தனரே.
தந்தை செல்வாவின் கொள்கைதனில் ஊறித் திளைத்தவரே
மனிதரில் மாணிக்கமாக வாழ்ந்தவரே!
உம் மரணத்தையும் துணிவுடனே எதிர் கொண்டீர்.
நீர் மடிந்து மாதங்கள் மூன்றல்ல வருடங்கள்
முந்நூறு சென்றாலும் மனித நேயங்கள் மறவாது உம் பணியை
உம் உருவம் நிலைத்திருக்கும் என்றும் நல்ல உள்ளங்களில்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்


''சிவகுமார் ஸ்ரோர்''
282, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(58864)

நாளை ஆரம்பம்
**விக்னா கல்வி நிறுவனம்**
O/L DAY CLASS
பிரிவு - 6
ஆரம்பம்: 3-9-1998
காலை 8-00 மணி
(58866)

**றோயல் அக்கடமி**
சாவகச்சேரி
DAY CLASS
**A/L 99**
உங்கள் ஆசிரியர்
பொருளியல்
வரதராஜன்
வகுப்புக்கள் ஆரம்பம்
07 - 09 - 98
காலை 10-00 மணி
ஆரம்ப அலகிலிருந்து பாட அலகுகள் பூர்த்தியாக்கப்படும்.
- நிர்வாகி
(58867)

## நன்றி நவிலலும் 31 ஆம் நாள் நிகழ்வுக்கான அழைப்பும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 30 | 03 |
| 03 | 08 |
| 1940 | 1998 |

**அமரர் பொன்னுத்துரை நித்தியானந்தன்**
(பிரதம லிகிதர், பிரதேச சபை, மானிப்பாய்)

எமது குடும்பத் தலைவரின் இறுதி நிகழ்வுகளில் நேரில்பங்கு கொண்டவர்களுக்கு எமக்கு ஆறுதல் கூறி எமது துன்பத்தில் பங்கு கொண்டவர்களுக்கும் பத்திரிகை மூலம் கண்ணீர்அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

02-09-98 இன்று புதன் எமது இல்லத்தில் நிகழும் 31 ஆம்நாள் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

- மனைவி மக்கள்.

திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம். (58863)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். சிறையில் 3 தமிழக மீனவர் உண்ணாவிரதம்!

யாழ்ப்பாணம், செப். 2

யாழ். சிறைச்சாலையில் கடந்த இரண்டுமாத காலமாகத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் மூன்று இந்திய மீனவர்களும் தம்மை இந்தியாவிற்கு அனுப்பி வைக்குமாறு கோரி நேற்று உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

இராமேஸ்வரம் வாசிகளான அன்ரனிரூபன் (20 வயது), ராஜ் தர்மராஜ் (16 வயது), அன்ரனி பிச்சை (19 வயது) ஆகியோரே இவ்வாறு உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்தவர்களாவர்.

ஜூலை 21 ஆம் திகதி மீன் பிடிப்பதற்காக இராமேஸ்வரத்திலிருந்து புறப்பட்ட இக் கடற்றொழிலாளர்களின் படகு பழுதடைந்தமையால் ஜூலை 24 ஆம் திகதி அனலைதீவில் கரையொதுங்கினார்கள்.

அனலைதீவில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இவர்கள் பின் ஊர்காவற்றுறை பொலீஸார் மூலம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டனர்.

இவர்களின் உண்ணா விரதம் தொடர்பாக ஊர்காவற்றுறை மேலதிக நீதிவான் மு. திருநாவுக்கரசுவுக்கு சிறைச்சாலை அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் தொடர்பு கொண்டு இவர்களை இந்தியாவுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நீதிவான் பணிப்புரை வழங்கினார்.

(உ-5)

## செல்வச்சந்நிதி உற்சவகால நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், செப். 2

தொண்டமானாறு செல்வச் சந்நிதி உற்சவகாலத்தையொட்டி சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை ஆச்சிரம மண்டபத்தில் ஒழுங்கு செய்துள்ள தெய்வீகக் கலை நிகழ்ச்சிகளில் —

இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு "முருகனும், தமிழும்" என்ற தலைப்பில் யாழ். பல்கலைக் கழகக் கலைப் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் சொற்பொழிவாற்றுவார்.

(இ-8-30)

## இறையியல்மாணி பரீட்சையில் சித்தி

யாழ்ப்பாணம், செப். 2

கடந்த ஏப்ரல் மாதத்தில் கல்கத்தாவிலுள்ள செரம்பூர் பல்கலைக்கழகத்தினால்நடத்தப்பட்ட இறையியல் மாணிப்பரீட்சையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எஸ். குகனேஸ்வரன், பி. தேவதாஸ், செல்வி டெய்சி ஆசீர்வாதம் ஆகிய மூவரும் இரண்டாம் பிரிவில் சித்தியடைந்துள்ளனர்.

மருதனார்மடம் கிறிஸ்தவ இறையியற் கல்லூரியில் தமது இறையியல் மாணிப் படிப்பை மேற்கொண்ட இவர்கள் யாழ். பல்கலைக் கழக முதுதத்துவமாணிப் பரீட்சைக்கு பதிவு செய்யத் தகுதி பெற்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-8)


உ

அளவெட்டி - நாகேஸ்வரம்

ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்

மஹோற்சவ விஞ்ஞாபனம்

03-09-1998 – 14-09-1998

மெய்யன்பர்களே!

நிகழும் வெகுதானிய வருடம் ஆவணி மாதம் 18 ஆம் நாள் (03-09-1998) வியாழக்கிழமை தொடக்கம் ஆவணி 29ஆம் நாள் திங்கட்கிழமை (14-09-1998) வரை மேற்படி உற்சவம் நிகழும், அன்பர்கள் அனைவரும் எம்பெருமானைத் தரிசனை செய்து திருவருள் பெறுமாறு வேண்டுகிறோம்.

விழாக்கால நேர ஒழுங்குகள்

மு. ப. 9-00 மணி அபிஷேகம், பூசைகள்
மு. ப. 10-00 மணி தம்பபூசை
மு. ப. 11-00 மணி வசந்தப்பூசை
பி. ப. 3-30 மணி தம்பபூசை
பி. ப. 4-00 மணி வசந்தபூசை
பி. ப. 4-15 வீதியுலா

கொடியேற்றம் 03-09-98 வியாழக்கிழமை மு. ப. 11-30 மணி
தேர் 12-09-98 சனிக்கிழமை மு. ப. 11-00 மணி
உறியடி 12-09 98 சனிக்கிழமை பி. ப. 5-00 மணி
ஸ்ரீரங்கநாதர் பாதபூசை 13-09-98 ஞாயிற்றுக்கிழமை மு. ப. 8-00 மணி
தீர்த்தம் 13-09-98 ஞாயிற்றுக்கிழமை மு. ப. 10-30மணி
ஆஞ்சநேயர் வைரவர் அபிஷேகம் 14-09-98திங்கட்கிழமை மு. ப. 8-00 மணி
திருக்கல்யாணம் 14-09-98 திங்கட்கிழமை பி. ப. 2-00 மணி

மாலை 5-30 மணி தொடக்கம் சொற் பொழிவு

ஆழ்வார்களும் திவ்வியப்பிரபந்தமும்

நிகழ்த்துபவர்: சைவப்புலவர்

திரு கந்தசத்தியதாசன் அவர்கள்

பொறுப்புரிமைப் பரிபாலனசபை

விளம்பர அன்பளிப்பு:

லிங்கன் கூல்பார் யாழ்ப்பாணம்.

(58873)


## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், செப். 2

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான மஹோற்சவ தேர்த்திருவிழா நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

சப்பறத் திருவிழா இன்று புதன்கிழமை மாலை 3 மணிக்கும், தீர்த்தத்திருவிழா நாளை மறுதினம் வெளிக்கிழமை காலை 8 மணிக்கும் இடம் பெறவுள்ளன. (இ-8)

★ ★ ★

வட்டு கிழக்கு துறட்டிப்பனை முத்துமாரி அம்மாள் தேவஸ்தான புனருத்தாரண வேலைகள் இன்று புதன்கிழமை காலை 7மணி முதல் 9மணி வரையுள்ள சுபவேளையில் தேவஸ்தான அத்திவாரக் கல் நடும் வைபவத்துடன் ஆரம்பமாகவுள்ளன.

அளவெட்டி நாகேஸ்வரம் அருள்மிகு ஸ்ரீ நாகவரத நாராயணர் கோயிலின் வருடாந்த உற்சவம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 11-30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறும்.

★ ★ ★

கோண்டாவில் நெட்டிலைப்பாய்ப் பிள்ளையார் கோயிலில் பாலஸ்தான கும்பாபிஷேகம் நாளை வியாழக்கிழமை காலை 9-00 மணி முதல் 10-00 மணிவரையுள்ள சுபவேளையில் நடைபெற உள்ளது. (இ-8)

★ ★ ★

யாழ் திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்தின் புதிய சித்திரத் தேர் பவளக்கால் நடும் விழா நாளை வியாழக்கிழமை காலை 9-16 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

(இ-173-30)

★ ★ ★

பருத்தித்துறை புலோலி மேற்கு அருள்மிகு தொப்பிளாவத்தை வைரவர் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை வியாழக்கிழமை காலை நடைபெறும் என ஆலய தர்மகர்த்தா சபை அறிவித்துள்ளது. (இ-118)

## 4 சடலங்கள் நேற்று அரச செலவில் அடக்கம்

யாழ்ப்பாணம், செப். 2

பளையில் இருந்து கடந்த 16 ஆம் திகதி யாழ். ஆஸ்பத்திரியில் பொலீஸாரால் ஒப்படைக்கப்பட்ட இனந்தெரியாத ஒரு சடலமும், இருபாலை ஆனந்தபுரத்தில் இருந்து கடந்த 29 ஆம்திகதி கோப்பாய்ப் பொலீஸாரால் ஒப்படைக்கப்பட்ட இனந்தெரியாத மூன்று சடலங்களும், இது வரை நாளும் இனம்காணப்படாத நிலையில் நேற்று அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டன.

இச்சடலங்களுடன் இந்த ஆண்டு ஜனவரி முதல் இது வரை 35 சடலங்கள் அரச செலவில் அடக்கம் செய்யப்பட்டுள்ளன. (உ-15)

# சிறந்த கல்விமான், இலக்கிய கர்த்தா என்ற பன்முகத் திறமையானவர்

## காரைக்கு மணிவிழாவில் பாராட்டு

யாழ்ப்பாணம், செப். 2

கவிஞராக தனது கலைப் பயணததை ஆரம்பித்து கால ஓட்டத்தில் நாடகக் கலைஞராக, நாடக ஆய்வாளராக, எழுத்தாளராக, சிறந்த கலைஞராகக் கலை உலகின் தனக்கென ஒருதனி இடத்தைப் பிடித்துக் கொண்டவர் கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளை இவர் ஒரு சிறந்த கல்விமானாகவும் அதே வேளை சிறந்த கலை, இலக்கிய கர்த்தாவாகவும்பன்முகத் திறமையுடன் ஒளி வீசிக் கொண்டிருக்கின்றார் என்பதனை இன்று அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபராக இருந்து ஓய்வு பெற்றுள்ள கலாநிதி காரை. செ. சுந்தரம்பிள்ளைக்கு கலாசாலையில் எடுக்கப்பட்ட மணிவிழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ் இவ்வாறு தெரிவித்தார்.

கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் சிரேஷ்ட ஆசிரிய மாணவ தலைவா ஸ்ரீசந்திரன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் மாணவர்கள், ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்புரைகளை நிகழ்த்தினர்.

அங்கு உரையாற்றிய பேராசிரியர் அ. சண்முகதாஸ் தனது உரையில் மேலும் குறிப்பிடுகையில்—

நாட்டுக் கூத்துப்பற்றி ஆழமான புலமை பெற்றவர் இவர். நாட்டுக்கூத்துக்கள் பற்றிப் பலரும் மறந்து போய்க் கொண்டிருக்கும் இக் காலத்தில் நாட்டுக்கூத்துக்கள் பற்றி நூல்கள் எழுதியும், மேடை ஏறி நடித்தும் நாட்டுக்கூத்தின் பக்கம் அனைவரின் பார்வையையும் படச்செய்த பெருமை இவரையே சாரும்— என்றார்.

யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் க. குணராசா உரையாற்றுகையில் கூறியதாவது:-

சுந்தரம்பிள்ளை கவித்துவம் மிக்கவர். இவரது கவிதைகள் மாறுபட்டவை, பல ஆண்டுகளின் முன்னால் இவர் வரைந்த கவிதைகள் பலரால் ஜீரணிக்க முடியாமல் இருநதன. அதாவது ஆசை காட்டும் பேரினவாத அரசியல்வாதிகளுக்கு ஆமாம் எனத் தலையாட்டி எமது பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. பொதுவுடமை பேசிய [illegible] பேரினவாதிகளிடமிருந்து நாம் நிறையவே கற்றுள்ளோம் என்பன போன்ற கருத்துக்கள் இவரது கவிதைகளில் காணபபட்டன.

மரபுக் கவிதைகளை எழுதிய இவர் புதுக்கவிதைகளையும் தன்னால் எழுத முடியும் என்பதைக் காட்டியவர். எதிர்காலத்திலே ஏற்படக் கூடிய விளைவுகளையும் அதற்கு எடுக்கக் கூடிய வழி வகைகளையும் கொண்ட ஒரு காப்பியத்தை இவர் படைக்க வேண்டும் என்பதே எமது பெரும் எதிர்பார்ப்பு ஆகும் என்றார்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் தற்போதைய அதிபர் மு. பரஞ்சோதி விழா நாயகனுக்கு கலாசாலை சார்பில தங்கப்பதக்கம் அணிவித்தார்.

காரை. சுந்தரம்பிள்ளையின் ஆசிரியரும் மூதறிஞருமான ஆ. சபாரத்தினம் பொன்னாடை போர்த்தி வாழ்த்துரை வழங்கினார்.

மகாவித்துவான் ந. வீரமணி ஐயர், சிரேஷ்ட விரிவுரையாளர் கலா. பொன்னம்பலம், பழைய மாணவர்களான சரா. புவனேஸ்வரன், யோகநாதன், திருமதி நந்தினி சிவராசன் ஆகியோரும் தற்போதைய மாணவர்களான திருமதி செந்தில் [illegible], வதனி ஆகியோரும் பாராட்டுரைகளை வழங்கினர்.

(இ-9)


LIONS CLUB OF NALLUR

நல்லூர் லயன்ஸ் கழகம்

10-வது ஆண்டு

மருத்துவ பரிசோதனை முகாம்

நல்லூர் லயன்ஸ் கழகத்தின் செப்ரெம்பர் "மாதாந்த செயற்றிட்ட" நிகழ்வில்

(Monthly Project – Sept – Medical Camp)

★ சிறுநீர் பரிசோதனை (சலரோகம்)
★ வாய்புற்றுநோய் பரிசோதனை
★ இரத்த அழுத்த பரிசோதனை
★ முழு மருத்துவப் பரிசோதனை

என்பன சழக மருத்துவப் பகுதித் தலைவர் லயன் டாக்டர் ஜி. பிரதீப்குமார் தலைமையில் வைத்தியர்கள், மருததுவபீட மாணவர்கள் என்போரால் மேற்கொள்ளப்படவுள்ளன.

காலம்: 06-09-1998 ஞாயிற்றுக்கிழமை

நேரம்: காலை 9.00 மணி

இடம்: திருநெல்வேலி கலாமன்ற சனசமூக நிலைய மண்டபம், கலாசாலை வீதி, திருநெல்வேலி.

பரிசோதனை மேற்கொள்ள விரும்புவோர்:

லயன் ஆர். சுரேஸ், தேவி தொலைத்தொடர்பு சேவை ஆடியபாதம் வீதியில் தொடர்பு கொண்டு பதிவு செய்யவும்.

லயன் பா. தவபாலன்
தலைவர்
லயன்ஸ் கழகம், நல்லூர்.

விளம்பர உதவி:

தேவி தொலைத்தொடர்பு சேவை

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

(கலாசாலை வீதி முகப்பில்)

T. Phone: 021 - 2142

(சி/4739)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஏழு வயதுச் சிறுமியை கெடுத்த 52 வயது நபர்

## 15 வருடக் கடூழியச் சிறை

ஏழு வயது சிறுமியைக் கற்பழித்த குற்றத்திற்காக 52 வயதுடைய சிறிசேன சில்வா என்பவருக்கு களுத்துறை உயர் நீதிமன்ற நீதிபதி சரத் குணதிலக 15 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனையும் 25 ஆயிரம் ரூபா நஷ்டஈடும் 10ஆயிரம் ரூபா குற்றப் பணமும் விதித்துத் தீர்ப்பளித்தார்.

இச்சம்பவம் பற்றி தெரிவிக்கப்பட்டதாவது:-

சம்பந்தப்பட்ட சிறுமி தங்கள் வீட்டு முற்றத்தில்பந்து விளையாடிக் கொண்டிருந்த போது பந்து தவறுதலாக பக்கத்து வீட்டு முற்றத்தில் போய் விழுந்தது. அந்தப் பந்தை சிறுமி எடுக்கச் சென்ற போது பக்கத்து வீட்டுக்காரரான—52 வயதுடைய — சிறிசேன சில்வா என்பவர் அந்தச் சிறுமியை வீட்டுக்குள் இழுத்துச் சென்று 4 முறை கெடுத்துள்ளார்.

4 பிள்ளைகளுக்கு தந்தையான எதிரியின் மூத்த மகளுக்கு 19 வயதாகும்.

இவ்வாறு கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்தது. (உ)

---

**உலக...**

(முதலாம் பக்கத் தொடர்)

பாரதீய ஜனதா அரசிடம் எடுபடவில்லை என்றும்—

நமது நாட்டில் இருப்பது இனப்பிரச்சினையேயன்றி மதப் பிரச்சினை அல்ல என்றும்—

அவர் மேலும் தெரிவித்தார். (உ-3-6)

---


## தொலைத்தொடர்பு தொடக்க விழா

இன்று 2-9-98 பிற்பகல் 1.30 — 3.00 மணி வரையுள்ள சுபவேளையில்

### வரதன்ஸ் தொலைத்தொடர்பு நிலையம்

என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பிக்க இருப்பதால் அனைவரும் வருகை தந்து ஆசீர்வதித்து ஏகும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

உள்நாட்டு இல. 070 - 212285

வெளிநாட்டு இல. 0094 - 70 - 212285

இரவு பகல் சேவை

உரிமையாளர்
அ. மு. வரதராஜன்,
வரதன் சேவிஸ் ஸ்ரேசன்,
வரதன் பாம்ஸ்

புன்னாலைக்கட்டுவன் தெற்கு. (58844)



## Modern Education Centre

Nelliady, Karaveddy.

## 99 A/L DAY CLASSES

ஆரம்பம்:- 02-09-98 புதன் மாலை 3 மணிக்கு

பௌதிகவியல்: திரு. குமரன்

இரசாயனவியல்: திரு. வசீகரன்

விலங்கியல்: திரு. கெங்காதரன்

தூய பிரயோக] கணிதம் திரு. வெக்ரர் வேலாயுதம்

## Science Centre

Nelliady, Karaveddy.

## 99 A/L DAY CLASSES

இரசாயனவியல்: திரு. சிவத்திரன்

தூய பிரயோக] கணிதம்: திரு. ரவி

★ நேர அட்டவணைகளை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

★ A/L 2000 இற்கான கணித, உயிரியல் வகுப்புகளும் நடைபெறுகின்றன.

-- நிர்வாகி

(கி/4734)


# மண்டபம் அமைப்பு

நீர்வேலி தெற்கு எல்லை வேம்படி வைரவர் கோயிலின் முன் மண்டபம் அமைக்கும் வேலைகள் அண்மையில் அத்திவாரக்கல் நடப்பட்டு மேற்படி ஆலய பரிபாலன சபையினரால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

---

**வட...**

(முதலாம் பக்கத்தொடர்)

கற்கைக்கான சர்வதேச நிலையம், ஜேர்மன் தொழில் நுட்ப ஒத்துழைப்பு நிறுவனம், யாழ். பல்கலைக்கழக அரசறிவியல், சமூகவியல் துறை ஆகியன இணைந்து ஒழுங்குசெய்துள்ளன.

இந் நிகழ்வில் தமிழ்மொழி பெயர்ப்பும் வழங்கப்படும் என்றும், ஆர்வமுள்ள அனைவரும் கலந்து கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-8]

---

**புலிகளுடன்...**

(முதலாம பக்கத் தொடர்)

முதலில் அவசியம்.

நாங்கள் புலிகளுடன் பேசுவதற்கு தயாராகவுள்ளதோடு ஆவலாகவும் உள்ளோம்.

என்றாலும் அவர்களிடம் நாம் சமர்ப்பிக்கும் யோசனைகள் ஆளும் பொது மக்கள் ஐக்கிய முன்னணியினாலும், எதிரணியில் உள்ள ஐ.தே. கட்சியினாலும், பெரும்பான்மையினரான சிங்களவர்களினாலும் அங்கீகரிக்கப்பட்டவையாக இருக்க வேண்டும்.

இல்லையேல் அதை புலிகள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

வெறுமனே மனிதாபிமான பிரச்சினைகள் குறித்து மட்டுமல்லாமல் அரசியல் தீர்வு குறித்துப் பேசவும் புலிகள் தயாராக இருக்க வேண்டும்.

சமரச முயற்சிகளில் 3 ஆம் தரப்பு மத்தியஸ்தத்துக்கு இடமேயில்லை.

வடக்கில் புலிகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது துர்பாக்கியமானதே. என்றாலும் இந்த நீண்ட காலப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அரசு எடுக்கும் பல்வேறு முயற்சிகளில் அதுவும் தவிர்க்க முடியாததொன்றாகிவிட்டது.

புலிகளின் இராணுவப் பலத்தைக் குறைப்பதற்காக தற்போதைய இராணுவ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய அவசியமான — கவலை தரும் — நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்தியாவின் மிக முக்கிய பங்களிப்புத் தேவைப்படுகின்றது.

இந்திய அமைதிப்படை பங்குபற்றியது போன்ற நேரடிப் பங்களிப்பை நான் குறிப்பிடவில்லை. இந்தியாவின் நல்லெண்ண ஒத்துழைப்பும் ஆத்மார்த்த நீதியான ஆதரவுமே அவசியமானவையாகும்.

ராஜீவ் காந்தி படுகொலை தொடர்பாக விடுதலைப் புலிகளின் தலைவர்பிரபாகரனை ஒப்படைக்கும்படி இந்திய அரசாங்கம் விடுத்திருக்கும் வேண்டுகோள் இலங்கை — இந்தியஉறவுகளில் பிரச்சினை ஏற்படுத்தியுள்ளது என்ற கூற்றை நான் ஏற்கவில்லை

நீண்ட காலமாகப் பேரிழப்பைத் தந்து வரும் இந்த இனப்பூசலுக்கு —

யார் குறுக்கே நின்றாலும் —எத்தனை தடைகள் வந்தாலும் - அவை அனைத்தையும் களைந்து—

தீர்வு காண வேண்டும் என்பதில் எமது அரசு உறுதியாக உள்ளது. வெகுவிரைவிலேயே நல்ல தீர்வை எமது அரசு காணும்.

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் எமது அரசு காட்டும் நேர்மையை—நெஞ்சுரத்தை இந்திய அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. எனவே எமது அரசுக்கு இந்திய அரசு முழு ஆதரவு தருகிறது — என்றார். (உ-3-6)

# இராணுவம் எனக் கூறி நள்ளிரவில் கத்திவெட்டு

யாழ்ப்பாணம், செப். 2

நள்ளிரவு வேளை வீட்டு வளவினுள் நுழைந்தவர்களை திருடர்களா, இராணுவமா என இனம் கண்டு கொள்ள முடியாத நிலையில் அயலவரின் உதவியை நாடி வீட்டின் பின் பக்கத்தால் வெளியே செல்ல முற்பட்ட ஒருவர் கத்திவெட்டுக்கு இலக்காகிக் கையில் காயமடைந்தார்.

சங்கானையில் நேற்று முன்தினம் நள்ளிரவு இடம் பெற்ற இச்சம்பவத்தில் நவசிவாயம் சிவகுமார் (வயது 41)

இராணுவம் வந்திருக்கிறோம். வீட்டைச் சோதனையிடப் போகிறோம்; கதவைத் திறவுங்கள் எனக் குரல் கேட்டதும் பிரஸ்தாப நபர் கதவைத் திறக்காமல் பின்புறமாக வெளியேறி அயலவரின் உதவியை நாடிச் சென்றதாகவும் அச்சமயமே ஒளிந்து நின்ற ஒருவர் அவரை நோக்கிக் கத்தி போன்ற பொருளினால் ஓங்கியதாகவும் அதைத் தடுக்க முற்படவே தமது கையில் காயம் ஏற்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

காயமடைந்த நிலையிலும் அயலவரை அழைத்துக் கொண்டு திரும்பி வந்த போது அந்த இனந்தெரியாத நபர்கள் தப்பியோடிவிட்டதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ-15)

## விவசாயிகளுக்கு

# சீடா உதவித்திட்டத்தின் கீழ் 1கோடி 11 லட்சம் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம் செப். 2

சீடா உதவித்திட்டத்தின் கீழ் யாழ். மாவட்ட விவசாயத்துறை மேம்பாட்டுக்கென ஒரு கோடியே பதினொரு லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கமநல சேவைத்திணைக்களத்தின் செயற்பாட்டை பலப்படுத்தல், விவசாய அமைப்பு முகாமைச் சபை உறுப்பினர்களுக்கு பயிற்சி வழங்கல், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இரண்டு சில்லு உழவு இயந்திரம் வழங்கல் மற்றும் நீரிறைக்கும் இயந்திரம் வழங்கல் போன்றவற்றுக்கு இந் நிதி பயன்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ - 5]

# பரிசளிப்பு விழா

திருநெல்வேலி, செப். 2

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழா எதிர்வரும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு கல்லூரி அதிபர் அ. சிறிக்குமரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக உயர்கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் இ. யோகநாதன் கலந்து கொள்வார்.

# மதகு திருத்தம்

நீர்வேலி, செப். 2

கோப்பாய் - மானிப்பாய் வீதியில் கோப்பாய் அரசினர் வைத்தியசாலையிலிருந்து சிறிது தூரத்தில் அமைந்துள்ள வெள்ளவாய்க்கால் மதகு திருத்தப்படுகிறது. இது இந்த வீதியில் அமைந்துள்ள பாரிய மதகு என்பது குறிப்பிடத்தக்கது. (இ -110)


எமது வீடியோ CD வெளியீடுகள்!

★ தாயின் மணிக்கொடி

★ சொல்லாமலே...

## சுப்பலோ வீடியோ

யாழ்ப்பாணம்.

★ பழைய படப் போஸ்டர்களும் விற்பனைக்கு உண்டு.

(சி/4743)

எமது புதிய வெளியீடு!

அர்ஜுன் - தபு நடித்த

தாயின் மணிக்கொடி

( ஒறிஜினல் )

11-30 மணிக்குப் பிரதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

## வீடியோ விமல்

யாழ்ப்பாணம்.

(கி/4741)

## மங்களகரமான திறப்பு விழா

## குமார் ஏஜன்ட்

எமது அன்புக்கினிய வாடிக்கையாளர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க இரவில் தங்கி நின்று தொலைபேசியில் உங்கள் உறவினருடன் கலந்துரையாட தங்குமிட வசதிகளுடன் இன்று மங்கள கரமாக திறந்து வைக்கப்படுகின்றது.

## குமார் ஏஜன்ட்

இல.342, கே. கே. எஸ். வீதி, சிவன்கோயிலுக்கு அருகில் யாழ்ப்பாணம்.

அது மட்டுமா நீங்கள் வெளிநாட்டில் இருப்பவர்களுடன் இங்கு இருந்து 70/- ரூபாவுடன் தொடர்பு கொள்ள வசதி செய்துள்ளோம். உங்களுக்கு தேவையான தொலைபேசி சேவைகளை, பக்ஸ் வசதிகளை குறைந்த கட்டணத்துடன் நிறைந்த பயனை பெற்றுக் கொள்ள அன்றும் இன்றும் என்றும்.

KUMAR AGENT
342, K. K. S. ROAD,
SIVANKOVILADY, JAFFNA.

உங்களுக்கு வரும் செய்திகளை உடனுக்குடன் உங்கள் இல்லங்களுக்கு அனுப்பி நேரடியாக தெரிவிக்கின்றோம்.

(சி/4742)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 02-09-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org